ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

பெரிய திருமொழி.

அ, கூ, ய, கக, பத்துக்கள். **651**

இந்த க்ரந்தம்
பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த
வ்யாக்யாநத்துடனும்,
அப்பு அரும்பதத்துடனும்,
உரையுடனும்,

ஸபாபண்டிதரான
ஸ்ரீமான் புதுப்பேர் இளையவில்லி
வித்வான், வெங்டாசார்யராலும்,
ஸ்ரீமான் புதுப்பட்டு
திருவேங்கடாசார்யராலும்,
நாநாதேசாநீத அநேக கோசங்களின் ஸஹாயத்தினால்
பரிசோதிப்பிக்கப்பட்டு,

ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபகஸபையாரால்,
பராங்குச திருவவதாராதி ருஂ0கஙு-வது ஸம்வத்ஸரமான
விரோதிகிருத் ஸம்வத்ஸரத்தில்

காஞ்சீபுரம்.
ஸ்ரீநிவாஸ அச்சுக்கூடத்தில்,
அச்சிட்டு ப்ரசுரம் செய்யப்பட்டது.

1911.

விஜயதேதராம்.

http://acharya.org

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

பெரியதிருமொழி

பதினோராம்பத்து முதல்திருமொழி

குன்றம் ப்ரவேசம்.

வ்யா;—குன்றம்ப்ரவேசம். பக்ஷிகளின் காலிலே விழுந்து என்னையும் அவனையும் சேரவிடவேணுமென்றாள் கீழ்த்திருமொழியில்; அவை இது செய்தனவில்லை. அதுக்குமேலே தென்றல் துடக்கமான பாத (ப) சுபதார்த்தங்களின் கீழே ஜீவிக்கப் போகாமையாலே, ஜீவகத்தில் நசையற்று நோவுபட்டுச் சொல்லுகிற பிராட்டி பாசுரத்தாலே தத்தசையைப் பேசுகிறார். .... *

மூ;—குன்றமொன் றெடுத்தேந்தி மாமழை
அன்றுகாத்த வம்மா னரக்கரை
வென்றவில்லியார் வீரமேகொலோ
தென்றல்வந்து தீவீசு மென்செய்கேன். (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்று	பசுக்களுமிடையரும் கல்வர்ஷத்தால் நோவுபட்டவன்று	வென்ற	ஜயித்த
குன்றம்ஒன்று	ஒருகோவர்த்தந பர்வதத்தை	வில்லியார்	வில்லையுடையரான பெருமாளுடைய
எடுத்து	ஸமூலமாகக் களைந்தெடுத்து,	வீரமேகொலோ	வீரப்பாட்டைப் பின்சென்றோ,
ஏந்தி	குடையாகத்தரித்து,	தென்றல்	தென்றல்காற்றானது
மாமழை	பெருத்த மழையில்	வந்து	நானிருக்குமிடமேற வந்து
காத்த	(அவர்களைரக்ஷித்தரு)	தீ	எரியை
அம்மான்	ஸ்வாமியாய், [ளினை	வீசும்	வீசாநின்றது?;
அரக்கரை	ராக்ஷஸஜாதியரையடைய	என்செய்கேன்	(இதற்குநான்) என்னசெய்யக்கடவேன்?

வ்யா;—முதற்பாட்டு. (குன்றமொன்றெடுத்து) வர்ஷத்துக்குப் பரிஹாரமாகவெடுப்பது - குடையாயிருக்க, மலையை எடுத்தா

அந;—குன்றம்ப்ரவேசம். (சேரவிடுகை) வருகைக்குஸூசகமாகை.

அந;—முதற்பாட்டு. (குன்றமித்யாதி) (பரிஹாரமாக) - நிவர்த்தகமாக,

http://acharya.org

யிற்றுப் பரிஹரித்தது. ஒருவரால் சஹிப்பிக்க வொண்ணாதாய், அத்விதீயமாயிருக்கிற மலையை எடுத்து. (ஏந்தி) மலையைத்தரித்துக் கொண்டு நிற்கிறவிடத்தில் பரார்த்தமான செயலாகையாலே வருத்தமற்று, இதுதானே போதுபோக்காக நின்றநிலை. (மாமழை) ப்ராப்தகாலத்தில் மழையன்றிக்கே, அகாலத்திலே வர்ஷத்துக்கு நிர்வாஹகனை இந்த்ரன் குபிதனாய் வர்ஷிப்பிக்கவந்ததாயிற்று. (அன்றுகாத்த) (௧) "ஸ்ரீஸ்ரீஸ்வீஜ:க்ஷுப்ஜலம் - மஹாருஷம் -கோகோபீஜந ஸங்குலம் - அதிவார்த்தம்" என்கிறபடியே பசுக்களும் இடையரும் நோவுபடுகிறவன்று பரிஹரித்த ஸர்வேஸ்வரன்.

(அரக்கரைவென்ற வில்லியார்) ஒருத்தன் அபகாரம்பண்ண, ராக்ஷஸஜாதியாக நிரஸித்தான். (வீரமேகொலோ தென்றல்வந்து தீவீசும்) பசுக்களும் இடையரும் நோவுபட அத்தைப் பரிஹரித்தான். ஒருவன் அபகாரம் பண்ண, ஜாதியாக அழியச்செய்தான்; அப்படியிருக்கிறவனுடைய வீரம் நமக்குப் பலித்தபடியோ, இத்தென்றல் இப்படி பாத(ஏ)கமாகிறது. (தீவீசும்) நெருப்புச்சுடப் புக்கால் (௨) "ஸீதோ பவ-ஸிதோபவ" என்று குளிரும்படிபண்ணவல்லவன் தன்பக்கலிலே குளிர்த்தியையுடைத்தான தென்றல் நெருப்புத்தூவும்போது அவர்பண்ணிவிட்டதாகவேணும். (என்செய்கேன்) பசுக்களும் இடையரும் வர்ஷத்தைப் பரிஹரித்துக்கொள்ளுதல்; பிராட்டி "அதார்மிகனைராவணன்நஷ்டனவான்" என்றுசபித்துப் போருமன்றாயிற்று, இவளுக்குத் தென்றல் பரிஹரித்துக் கொள்ள ப்ராப்தியுள்ளது. .... (௧)

"ஒன்று" என்றதுக்குத் தாத்பர்யமருளுகிறார் (ஒருவரித்யாதி). "எடுத்து" என்று சொல்லியிருக்கவும் "ஏந்தி" என்பானென்னென்ன வருளுகிறார் (மலையித்யாதி). "மா" என்று விசேஷித்ததுக்குக் கருத்து (ப்ராப்தேத்யாதி).

(ஒருத்தன்) ராவணன். விரஹிணிகளுக்குத் தென்றல் தீயாயிருக்கை ஸித்தமாயிருக்க, அவர் வீரத்தை இதுக்கு ஹேதுவாகச் சொல்லுவானென்னென்ன வருளுகிறார் (நெருப்பித்யாதி). அவன் வாசியாலே நானே ஸந்நிதியிலேபோய் பரிஹரிக்கப் போருகிறதில்லை என்றுகருத்து. பாத (ஏக) கமானால் நெருப்பையும் குளிரப்பண்ணுகிறவள், குளிர்ந்ததைக் குளிரப்பண்ணுகைக்கு விசாரப்படவேணுமோவென்னென்ன வருளுகிறார் (பசுக்களுமித்யாதி). (௧)

(௧) வி-பு-௫-௧௧-௧௩. (௨) ரா-ஸு-௫௩-௩௦.

http://acharya.org

மூ;—காரும் வார்பனிக்கடலு மன்னவன்
தாரு மார்வமும் கண்டதண்டமோ
சோரு மாமுகில் துளியினூடுவந்து
ஈரவாடைதா னீருமென்னையே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
காரும்	காளமேகத்தையும்	சோரும்	வர்ஷியாநின்ற
வார்	குறைவறநிறைந்து	மாமுகில்	மேகங்களினுடைய
பனி	குளிர்ந்திருந்துள்ள	துளியின் ஊடு வந்து	துளிக்குள் குளிர்ச்சியை யூட்டிக்கொண்டு வந்து(அத்தாலே)
கடலும்	ஸமுத்ரத்தையும்	ஈரம்	மிகவும் சைத்யத்தை விளைக்கக்கடவ
அன்னவன்	ஒத்திருந்துள்ளஸர்வேஸ்வரனுடைய[யும்	வாடை தான்	கார்முனது
தாரும்	திருத்துழாய்மாலையை	என்னை	(விரஹக்ருசையான) என்னை
மார்வமும்	திருமார்பையும்[ததற்கு	ஈருமே	நலியாநின்றதே. (௨)
கண்ட	ஆசைப்பட்டுப் போந்		
தண்டமோ	(அவன்) தண்டம் செய்தபடி என்தான்!;		

வ்யா;—இரண்டாம்பாட்டு. (காரும்) மேகமும். (௧) "மேகஶ்யாமம் - மேகஶ்யாமம்" என்னும்படியாயிறே வடிவுதானிருப்பது. (வார்பனிக்கடலும்) குறைவற நிறைந்து குளிர்ந்திருக்கிறகடலும். (அன்னவன்) ஒன்றொப்பாக மாட்டாமையாலே கதிர்பொறுக்கிப்பல வற்றையுமொப்பாகப் பிடிக்கிறது. (தாரித்யாதி) தோளும் தோள் மாலையுமான மார்வும்கண்டு ஆசைப்பட்டுவந்த தண்டமோ? இதர விஷயப்ரவணர்பட்டது படாநின்றோம். (௨) "ஸங்கேஶாத் [illegible]- புத்திராஶாத் ப்ரணஶ்யதி" என்கிறபடியே விநாஶத்தைப்பலிப்பித் தான். இதரவிஷயப்ரவணர்பட்டது படாநின்றோம், இப்ப்ராப்த

அரு;—இரண்டாம்பாட்டு (காருமித்யாதி) அந்தி தென்றல் நெருப்பை ச்சொரிவதுக்குமேல், குணதிசைமாருதமான வாடை ஈரும்படியைச் சொல்லு கிறுரென்று ஸங்கதி.

"தண்டமோ"என்று யமதண்டமென்று தோற்றுகையாலே, இதுக்குத் தாத்பர்யமருளுகிறுர் (இதரேத்யாதி).

(௧) ரா-அயோ-அரு-அ (௨) கீ-௨-௬௩-

http://acharya.org

விஷயத்தை ஆசைப்பட்டநாங்களும்.

(சோருமித்யாதி) வர்ஷிக்கிற மஹாமேகங்களினுடைய துளி க்குள்ளிட்டுக்குளிர்த்தியைஊட்டிக்கொடுவருகிற ஈரவாடையானது விரஹத்தாலே க்ருஶமாயிருக்கிற என்னுடலை ஈர்ந்து பொகடாநி ன்றது. நற்கொலையாகாதே உயிர்க்குலையாக்கி நலியாநின்றது.(உ)

மூ;—சங்குமாமையும் தளருமேனிமேல்
திங்கள்வெங்கதிர் சீறுமென்செய்கேன்
பொங்குவெண்டிரைப் புணரிவண்ணனார்
கொங்கலர்ந்ததார் கூவுமென்னையே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சங்கும்	கையில் வளையும்	வண்ணனார்	வடிவை யுடையனான
மாமையும்	நிறமும்		ஸர்வேஶ்வரனுடைய
தளரும்	தளராநின்றுள்ள	கொங்கு அலர்	பரிமளப்ரசுரமான
மேனி மேல்	என் உடம்பின்மேலே	ந்த	
திங்கள்	சந்த்ரனுடைய	தார்	திருத்துழாய்மாலையான
வெம்கதிர்	வெவ்விய கிரணங்களா		து
சீறும்	சீறுநின்றன; [னவை	என்னை	(ஸ்த்ரீத்வத்தை நோக்
என் செய்கேன்?-;			கிக்கொண்டிருக்கி
பொங்கு	கிளரா நின்றும்		ற) என்னை
வெண்	வெளுத்துமிருக்கிற	கூவும்	(இங்ஙனே புறப்படா
திரை	அலைகளையுடைய		யோ என்று)அழை
புணரி	கடல் போன்ற		கூவாநின்றது. (௩)

வ்யா;—மூன்றாம்பாட்டு. (சங்கித்யாதி) நிறமும் வளையும் தொங்குகைக்கு ஆஶ்ரயமின்றிக்கேயிருக்கிற உடம்பின்மேலே. (திங் களித்யாதி) நிலா உடம்பிலே படாநின்றால், பெண்பிறந்தார் எங் ஙனே ஜீவிக்கும்படி. (பொங்கித்யாதி) ஓதம் கிளர்ந்தகடல்போலே

கொல்லும் என்னாதே "ஈரும்" என்றதுக்குபா(வ)வம்(நற்குலையித்யாதி).

அரு;—மூன்றாம்பாட்டு. (சங்குமித்யாதி) "கண்ணுக்குத்தோற்றாதே ஓடித்திரிகிற காற்று எவ்வளவு" என்று, "எம்பெருமான்" என்கிற நல்திங் கள் கண்ணுக்கிலக்காய் கைகளாலே நெருப்பை இறைக்கிறதென்று க்லேசிக்கி றதென்று ஸங்கதி.

என்செய்கேனென்கிறதென்? நீ நிலாமுற்றத்தை விட்டு உள்ளே புகு ரலாகாதோ? என்னும் சங்கையிலே "பொங்கித்யாதி" என்று தாத்பர்யமரு ளுகிறார் (ஓதமித்யாதி). ... ... (௩)

ஸ்ரமஹரமான வடிவையுடையராயிருக்கிறவருடைய பரிமளப்ரசுரமாயிருக்கிறதாரானது உள்ளேபுக்கு "ஸ்த்ரீத்வத்தை நோக்கிக்கொண்டு மறையவிருக்கிறதென்? இங்ஙனே புறப்படாயோ" என்று அறைகூவாநின்றது. .... (௩)

மூ;—அங்கோராய்க்குலத்துள் வளர்ந்துசென்று
அங்கோர்தாயுருவாகி வந்தவள்
கொங்கைநஞ்சுண்ட கோயின்மைகொலோ
திங்கள்வெங்கதிர் சீறுகின்றதே. (ச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அங்கு	கம்ஸபயமும் இருளுமாய்க்கிடந்த ஸமயத்திலே	வந்தவள்	வந்தவளான பூதனையின்
ஓர் ஆய்ச்குலத்துள்	திருவாய்ப்பாடியேற	கொங்கை	ஸ்தநத்திலே தடவிக்கிடந்த
சென்று	எழுந்தருளி	நஞ்சு	விஷத்தை
வளர்ந்து	வளர்ந்தருளா நிற்க	உண்ட	அமுது செய்த
அங்கு	அவ்விடத்திலும்	கோயின்மை கோலோ	ஆராய்ச்சியில்லாத செயலைப்பின்சென்றோ,
ஓர்	க்ருத்ரிமத்தில் ஒப்பற்றவளாய்	திங்கள்	சந்த்ரனுடைய
தாய் உரு ஆகி	தாயின் வடிவைக்கொண்டு	வெம்கதிர்	வெவ்விய கிரணங்களானவை
		சீறுகின்றதே	சீறுகின்றனவே. (ச)

வ்யா;—நாலாம்பாட்டு. (அங்கோராய்க் குலத்துள்வளர்ந்து சென்று) அவ்வளவிலே ஒதுங்குகைக்கு ஒரு ஊருண்டாயிற்று. கம்ஸபயமும் இருளுமாய் ஸ்ரீவஸுதேவரும் தேவகியாரும் நோவுபடுகிற ஸமயத்திலே அது, ஒரு அஞ்சினன் புகலிடமுண்டாயிற்று. கம்ஸனுக்குக் குடிமக்களாய் இரை இறுகிறக்கச்செய்தே அவனுக்கஞ்சாதே பிள்ளைகளை நோக்கிக் கொடுக்கவல்ல ஊரிறே.

அந;—நாலாம்பாட்டு. (அங்கோரித்யாதி) போது விடியாதோ? தானே மதி கெட்டுப் போகிறுனென்று தோழிசொல்ல, "ஒரு நிலையாக நின்றன்றோ இவன் பாதிக்கிறுன்; எனக்கு விடிவது எப்போதோ" என்று மீளவும் அதுக்க நோவு படுகிறுளென்று ஸங்கதி.

கீழ்வாக்ய விவரணம் (கம்ஸேத்யாதி). அஞ்சினன் புகலிடமானபடி யென்னென்ன (கம்ஸனுக்கித்யாதி). ... ... (ச)

http://acharya.org

(அங்கித்யாதி) போனவிடத்திலே நலியவேணுமென்று தாய் வடிவுகொண்டு வந்தவளை, அநுகூலையென்று புத்திபண்ணாதே, அவளை ப்ரதிகூலையென்றே அறிந்து, அவள் முலையையுண்டு முடித்த ஆராட்சியில்லாத செயலோ? (திங்களித்யாதி) சந்த்ரன் இங்ஙனே பாதகனாகிறது, தனக்குக் குளிர்ச்சியையும் தர்ஶநீயதையையும் கொடுத்துவிட்டு, அவன் கருத்தைப் பின்சென்றோ இவன் நம்மை இப்போது நலிகிறது; (க) "பீஷாஸ்மாத்வாத:-பீஷோதேதி ஸூர்ய:" என்றவனைப் பின்செல்லவேணுமிறே அவற்றுக்கு. .... (௪)

மூ;—அங்கோராளரி யாயவுணனைப்
பங்கமா விருகூறு செய்தவன்
மங்குல் மாமதி வாங்கவேகொலோ
பொங்குமாகடல் புலம்புகின்றதே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அங்கு	ப்ரஹ்லாதாழ்வானுடைய ப்ரதிஜ்ஞா ஸமகாலத்திலே	மாமதி	சந்த்ரனை
ஓர் ஆளரியாய்	அத்விதீயமான நரஸிம்ஹரூபியாய் (தூணிலே தோன்றி)	மங்குல்	ஆகாஶத்திலே (வர்த்திக்கும்படியாக)
அவுணனை	ஹிரண்யனை	வாங்கவே கொலோ	(கடலைக் கடைந்து உள்ளினின்றும்) வெளிக்கிளப்பினானென்ற வருத்தத்தினாலேயோ
பங்கமா	மாநபங்க(ப்ரஷ்ட)ம்பண்ணி	பொங்கு	திரைக்கிளப்பத்தையுடைய
இருகூறுசெய்தவன்	இருதுண்டமாகக் கிழித்துப்பொகட்ட ஸர்வேஶ்வரன்	மாகடல்	ஸமுத்ரமானது
		புலம்புகின்றது	கோஷியாநின்றது. (௫)

அ௫;—அஞ்சாம்பாட்டு. (அங்கோரித்யாதி) தான் இப்படி மதிக்கொடுங்கி மதிகெட்டுக் கூப்பிட்டுக் கொண்டிருக்கச்செய்தே, கடல் தான் கோஷிக்கக்கேட்டு, இதுவும் என்ன மதி இழந்ததோ வென்கிறாளென்று ஸங்கதி.

நான் * சந்த்ரகாந்தாநநத்தைக் காணாதே மதிகெடுவது, இது சந்த்ரனைக்கண்டு மட்டாதே கூப்பிடுகிறதாக என்னுகிறாளென்று கருத்து; சந்த்ரனைக்கண்டால் கடல் மிகவும் கோஷிக்குமிறே. ... ... (௫)

(க) தை-ஆ௩-அ.

http://acharya.org

வ்யா,—அஞ்சாம்பாட்டு. (அங்கித்யாதி) ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுடைய ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே நரஸிம்ஹரூபமாய்) அஸுரப்ரக்ருதியான ஹிரண்யனையும் மதிப்பறுத்து அநாயஸேந கிழித்துப் பொகட்டான். அவனை எதிரியாக்கி ஆயுதமெடுக்கையன்றிக்கே வெறுங்கையே புறப்பட்டுத் திருவுகிராலே கிழித்துப் பொகட்டான்.

(மங்குலித்யாதி) இப்படி அரியவற்றை வருத்தமறச் செய்து தலைக்கட்ட வல்லவன், தன்னை நெருக்கிக்கடைந்து உள்ளுண்டான மதியை வாங்குகையோ இக்கடல் இங்ஙனே கிடந்து கூப்பிடுகிறது, என்னைப்போலே மதி இழந்தோ இக்கடலும் கூப்பிடுகிறது.*(க)மதியெல்லாமுள்கலங்கியிறே இவளும் கிடக்கிறது. ஒன்றுக்கும்விக்ருதையாகாத நான் கலங்கிக் கூப்பிடுகிறாப்போலேயிருந்தது இக்கடலும்தன் காம்பீர்யமெல்லாம் அழிந்துகூப்பிடுகிறபடியும்.(மங்குல்) ஆகாசம். .... (ரு)

மூ;—சென்றுவார்சிலை வளைத்திலங்கையை
வென்றவில்லியார்வீர மேகொலோ
முன்றில் பெண்ணைமேல் முளரிகூட்டகத்து
அன்றிலின்குர லடருமென்னையே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சென்று	எதிரிகளிருக்குமிடமேறப்போய்	முன்றில்	வாசலிலே நிற்கிற
வார்	நெடிதான	பெண்ணைமேல்	பனைமரத்தின்மேலே
சிலை	தனுஸ்ஸை	முளரி	தாமரைப்பூவாலும் தாதாலும் தண்டாலும்(பிணைக்கப்பட்ட)
வளைத்து	(நாணேற்றி)வளைத்து,		
இலங்கையை	லங்கையிலுள்ள ராக்ஷஸர்களை	கூட்டகத்து	கூட்டிலே கிடக்கிற
வென்ற	அழித்த	அன்றிலின்	அன்றில் பக்ஷியின்
வில்லியார்	பெருமாளுடைய	குரல்	த்வநியானது
வீரமேகொலோ	ஆண்பிள்ளைத் தனத்தைப்பின்சென்றோ,	என்னை	என்னை
		அடரும்	வருத்தாநின்றது?.(கூ)

அரு;—ஆறாம்பாட்டு. (சென்றித்யாதி) திங்கள் தீவீச, ஸமுத்ரத்தைப்போலே தான் புலம்புகிறபடியைக் கண்டு, அன்றில்அருகே நெருப்பை உருக்கி வார்த்தாப்போலே செவிபடக்கூப்பிட, அதுக்கும் நொந்துபடுகிறாளென்று ஸங்கதி.

(க) தி-வாய்-க-சு-ரு.

http://acharya.org

வ்யா;—ஆரும்பாட்டு (சென்று) எதிரிகள் வரப்போர விருக்கையன்றிக்கே(க) "ஶத்ரூந் - அபியாதா" என்கிறபடியே அவர்கள் இருந்த விடங்களிலே சென்று (உ) "அவஷ்டப்யமஹத்தநு: - அவஷ்டப்யமஹத்தநு:" என்கிறபடியே, ஒருவர்க்கு அடக்கவொண்ணாதே நெடிதாயிருக்கிற வில்லை வளைத்து லங்கையை அழியச்செய்தவருடைய ஆண்பிள்ளைத்தனமோ. (முன்றிலித்யாதி) வாசலிலே நிற்கிற பெண்ணையின்மேலே, தாமரைப்பூவாலும் தாதாலும் தண்டாலும் செய்த கூட்டிலே கிடக்கிற அன்றிலினுடைய த்வநி எனக்கு பாத (வத)கமாகாநின்றது. நான் இதுக்கு எத்தைச்செய்வேன். நான் இதுக்குமார்விலே அப்பேற்கவோ? .... (சா)

மூ;—பூவைவண்ணனார் புள்ளின்மேல்வர
மேவிநின்று நான் கண்டதண்டமோ
வீவிலைங்கணைவில்லி யம்புகோத்து
ஆவியே யிலக்காக வெய்வதே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஐங்கணைவில்லி	பஞ்சபாணனான மந்மதன்	வண்ணனார்	திருநிறத்தையுடைய ஸர்வேஶ்வரன்
வீவு இல்	க்ஷணகாலமும் ஒழிவில்லாமல்	புள்ளின்மேல்	பெரிய திருவடியின் மேலே
அம்பு கோத்து	பாணங்களைத் தொடுத்து	வர	எழுந்தருளாநிற்க,
ஆவியே	என்னுடைய மர்மஸ்தாநத்தையே	நான்	நான்
இலக்காக	லக்ஷ்யமாகக்கொண்டு (அறுதுடிக்கும்படி)	மேவி நின்று	ப்ரீதியையாகாதேநின்று
எய்வது	ப்ரஹரிக்கையாகிறவித்து,	கண்ட	ஸேவித்ததற்கு
பூவை	காயாம்பூப்போன்ற	தண்டமோ	தண்டம் செய்தபடியோ; (எ)

(போர) யுத்தம் பண்ண. "வார்" என்றுசீட்சியைச்சொல்லுகையாலே பலிதார்த்தம்ருளுகிறார் (அவஷ்டப்யேத்யாதி). "பெண்ணை" பனை. "முளரி" தாமரையாகையாலே அருளுகிறார் (தாமரையித்யாதி). "ஏ" என்கிறது- விஷாதலேசகமான அவ்யயமாயருளுகிறார் (நானிதற்கித்யாதி). அம்பேற்கை) யுத்தம் பண்ணுகை; அதாவது - வில்லியார் வீரங்கொண்ட வித்தைக்கண்டு, ஒட்டிமுல் அது ஒப்போமொவென்று கருத்து. (அ)

(க) ரா-அ-யோ க-உ-கூ- (உ) ரா-யு-கரு-கக-

http://acharya.org

வ்யா;—ஏழாம்பாட்டு. (பூவைவண்ணனார்) வைத்தகண்மாறாதே கண்டுகொண்டிருக்க வேண்டும்படி ஆகர்ஷகமான வடிவையுடையவர், ஒரு மேருவைக் கிளிபமேசைப்படிக்காப்போலே பெரிய திருவடி திருத்தோளிலே வர. (மேவியித்யாதி) சிதிலையாகாதே நின்று நான் கண்டதுக்குத் தண்டமோ?. (வீவிலித்யாதி) காமனானவன் தன்னுடைய புஷ்பபாணங்களாலே தோல் புரையேயன்றியே மர்மத்திலே எய்கிறவிது. .... (எ)

மூ;—மாலினம் துழாய்வரு மென்னெஞ்சகம்
மாலினந்துழாய் வந்தென்னுள் புக
கோலவாடையும் கொண்டுவந்ததோர்
ஆலிவந்ததாலரிது காவலே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
என்	என்னுடைய	கோலம்	பரிமளப்ரசுரமான
நெஞ்சகம்	நெஞ்சானது	வாடையும்கொண்டு	வாடைக்காற்றையுங் கூடக்கொண்டு
மால்	(எனக்கவன்பக்கலுண்டான) வ்யாமோஹ	வந்தது ஓர்	(நிலம் பார்த்துப்போகைக்கு) முன்பே வந்ததொரு
இனம்	அநுரூபமாக [த்துக்கு	ஆலி	சிறுதுளியானது
துழாய்வரும்	இங்குமங்கும் தேடித் திரிந்து வாராநின்றது.	வந்தது	(மேலிடும்) வாராநின்ற
மாலின்	ஸர்வேச்வரனுடைய	ஆல்	கஷ்டம்; [து;
அம் துழாய்	அழகிய திருத்துழாய்த்தாரானது	காவல்	(இதற்குத்தப்பி) உயிரைக் காத்துக்கொள்ளுகை [தது.
என்னுள்வந்துபுக	எனக்கு ஸ்ம்ருதி விஷயமாக,	அரிதே	அஸாத்ய(ஸ)மாயிருந்

அ;— ஏழாம்பாட்டு. (பூவையித்யாதி) தோல் புரையே பாதிக்கிற காற்றும், கண்ணுக்குத்தோற்றின மாத்ரமானமதியும், செவியிலே நோவுபடுத்தின அன்றிலும், பாதித்தாலும் இவற்றால் இவள் ஈடுபடவில்லை. இப்படி பரிகரங்களுக்கும் இடையாத இவளை நீயே போய் நெஞ்சிலேபட எய்யச்சொல்லிவிட, வந்த காமனுக்கு அஞ்சி நோவுபடுகிறாளென்று ஸங்கதி.

" ஐங்கணைவில்லி - வீவில்லாதே, அம்பு கோத்து" என்றந்வயம் திருவுள்ளம் பற்றியருளுகிறார் (காயனித்யாதி). ... ... (எ)

http://acharya.org

வ்யா;—எட்டாம்பாட்டு. (மாலித்யாதி) என்னுடைய நெஞ்சானது எனக்கு அவன்பக்கலுண்டான மாலுக்குஇன்மாக்த்துழாவி வாராநின்றது. (மாலித்யாதி) ஸர்வேஸ்வரனுடைய திருமேனியின் ஸ்பர்ஸத்தையுடைய திருத்துழாயானது வந்து எனக்கு ஸ்ம்ருதிவிஷயமாக,பரிமளத்தை யுடைத்தான வாடையைக்கொண்டு. (வந்ததோராலி வந்ததால்) பண்டே நிலம் பார்த்துப்போன சிறுதுளியானது வாராநின்றது. (அரிது காவலே) தேசிகனான ஸ்ரீ விபீஷணாழ்வானே நின்று வழியிட்டுக் கொடுக்கையாலே ராக்ஷஸர்கள் வெல்லமாட்டிற்றிலர்களிறே. அப்படியே நிலவரே வழிகாட்டிக்கொடுவந்து நலியாநிற்க நம்மால் பரிஹரிக்கப்போமோ? (அ)

மூ;—கெண்டையொண்கணுந் துயிலுமென்னிறம்
பண்டு பண்டுபோ லொக்கும்மிக்கசீர்
தொண்டரிட்டபூந் துளவின் வாசமே
வண்டுகொண்டு வந்தூது மாகிலே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சீர்	(அநந்யப்ரயோஜநனதை யாகிற) கல்யாணகுணத்தாலே	என்	என்னுடைய
		கெண்டை	கெண்டை மத்ஸ்யம் போல்
மிக்க	சிரியர்களான	ஒண்	தர்ஸநீயமான
தொண்டர்	ஸ்ரீவைஷ்ணவர்கள்	கண்ணும்	கண்களும்
இட்ட	ஸமர்ப்பித்த	துயிலும்	உறங்கப்பெறும்;
பூந்துளவின்	திருத்துழாயலரின்	நிறம்	(என்னுடைய) மாமை நிறமும்
வாசம்	பரிமளத்தை		
கொண்டுவந்து	கொண்டுவந்து	பண்டு பண்டு போல் ஒக்கும்	பழைய படியே அவிகலமாயிருக்கப் பெறும். (கூ)
வண்டு	வண்டானது [ல்		
ஊதுமாகில்	(என்னருகில்) ஊதினா		

அ;—எட்டாம்பாட்டு. (மாலித்யாதி). கீழ்ப்பாட்டிலே காமன் சரங்களாலே எய்ய, அவற்றாலே நெஞ்சு சிதிலமாய் மாலேறிவர, கீழே கூவுகின்ற கொங்கலர்ந்திருக்க அவகாசமுண்டாய் உள்ளே புக்கது, எதிராளின் நெஞ்சு அந்நிலைபடியாலே முன்னே வந்தவாடையும்துளியும் மீளவந்தபடியைச்சொல்லி மிகவும் அருசுகிறளென்று ஸங்கதி.

(மாலுக்கு) வ்யாமோஹத்துக்கு. (இனமாக) ஒத்ததாக; இனத்தார் என்னக்கடவதிறே ஸந்தித்தரை. "வந்ததோராலி" என்கையாலே முன்னே நிலவரமுண்டானதென்று தோற்றுகையாலேஅருளுகிறார் (தேசிகரித்யாதி). ... ... (அ)

http://acharya.org

வ்யா;—ஒன்பதாம்பாட்டு. (கெண்டையித்யாதி) முக்த்த(ஜ)மாய் தர்சநீயமாய் உறக்கத்தாலல்லது போதுபோக்குகையரிதான கண்ணுமுறங்கப் பெறலாம். (என்னிறம்) அவன் வாய் புலற்றும் நிறம், அறப்பண்டுபோலேயாம். கலக்கையாகிறது பிரிவிக்கு அங்குராமிறே. கலந்து பிரிந்து லாபாலாபங்களறியாதே பூர்ணையாயிருந்தபோதை நிறம் போலேயாம்.

கண்ணுமுறங்கி நிறமும் வருவதுதானென்செய்தாலென்னில்; (மிக்க வித்யாதி) அநந்ய ப்ரயோஜனரான ஸ்ரீ வைஷ்ணவர்கள் இட்ட திருத்துழாயில் பரிமளத்தை வண்டு கொண்டுவந்து ஊதாநிற்கில், திருத்துழாயில்பரிமளம் உத்தேஸ்யமாகில், "தொண்டரிட்ட" என்ன அபேக்ஷையாரோதா? "மிக்கசீர் தொண்டரிட்ட" என்றானென்னென்னில்; "அங்குத்தைக்குப் பரிவருண்டு" என்றறிந்தாலாயிற்று இவளுக்குக்கண் உறங்குவதும், பழைய நிறம் வருவதும். (௧) "ஸர்வாத்மநஸ்த்வா ஜ-ஆத்வாரமநுவ்ரஜ" என்றிருக்கு மவளாகையாலே அநந்யப்ரயோஜனரான ஸ்ரீவைஷ்ணவர்கள் அங்குத்தைக்குப் பரியாநின்றார்கள்" என்றுகேட்டவாறே, இனி நமக்கொரு குறையில்லை என்று கண் உறங்காநிற்கும்; நிறமும் பழையபடியேயாம். .... (௯)

மூ;—அன்று பாரதத்தைவர் தூதனாய்ச்
சென்றமாயனைச் செங்கண்மாலினை
மன்றிலார் புகழ் மங்கைவாள் கலி
கன்றிசொல் வல்லார்க் கல்லலில்லையே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

அரு;—ஒன்பதாம்பாட்டு. (கெண்டையித்யாதி) "அரிது காவலே" என்றதிகவும் க்லேசிக்கக்கண்ட தோழியானவள் பொறுக்கமாட்டாதே உனக்கு துக்கமே செழுமின்றிக்கே கண்ணுறங்கி யிருக்கைக்கு நானென்ன செய்கேன், நாயகன் - ஸ்வதந்த்ரன்; நீ பொறுக்கவல்லையல்லை; இனி நானும் இங்ஙனே உன்னைக்கண்டு துக்கிக்குமத்தனை யன்றோ? என்று க்லேசிக்க, அது - பொறுக்கமாட்டாதவளாகையாலே எங்கேயிருந்தாலும் அவனுக்குப் பரிவருண்டென்றுமது தோற்ற, * மிக்கசீர் தொண்டரிட்ட மாலையின் மணத்தைக்கொண்டு வரும்படி பண்ணிணையாகில், நான் கன்னியா யிருக்குமாபோலே யிருக்கிறேனென்று சொல்லுகிறாளென்று ஸங்கதி.

(அறப்பண்டுபோலே) முன்பானனென்னென்ன வருளுகிறார் (கலக்கையித்யாதி).

(௧) ரா-அ-௧௯-௨௧.

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்று	பாண்டவர் நோவுபடுகிறவன்று	ஆர்	வ்யாபித்துக்கிடக்கிற
பாரதத்து	பாரதயுத்தத்திலே	புகழ்	புகழையும்
ஐவர்	அவ்வைவர்களுக்கும்	மங்கை	திருமங்கை யென்னும் திருநகரியையும்
தூதனாய்	தூதனாய்	வாள்	வாளையுமுடையரான
சென்ற	எழுந்தருளின	கலிகன்றி	ஆழ்வார் (அருளிச்செய்த
மாயனை	ஆஶ்சர்ய சீலனைப்,	சொல்	இப்பாசுரங்களை [ய்த
செம்கண்	செவ்விய திருக்கண்களை யுடையனை	வல்லார்க்கு	ஓதவல்லார்களுக்கு
மாலினை	ஸர்வேஶ்வரன் விஷயமாக,	அல்லல்	பகவத் விஶ்லேஷவ்யஸநமானது.
மன்றில்	நாற்சந்திகள் தோறும்	இல்லை	உண்டாக மாட்டாது.

வ்யா;—பத்தாம்பாட்டு. (அன்றித்யாதி) புண்டரீகாக்ஷனை ஸர்வேஶ்வரனாய் தன்னை யொழிந்ததுக்கடங்கலும் தான் நியாமகனாயிருந்து வைத்துப் பாண்டவர்கள் நோவுபடுகிறவன்று, பாரதஸமரத்திலே "இன்னார் தூதன்" எனனும்படி தன்னைத் தாழவிட்டு தூதனாய் நின்ற ஆஶ்சர்யத்தையாயிற்றுக் கவிபாடிற்று. (மன்றிலார் புகழ்) நால்வர் திரண்டவிடமெங்கும் திருமங்கையாழ்வார் வார்த்தையே. ஆழ்வார் அருளிச்செய்த வித்தை அப்யஸிக்க வல்லவர்களுக்கு பாத (?)கபதார்த்தங்களால் நோவுபடவேண்டாதே நித்யஸம்ஶ்லேஷத்தோடே காலஞ்செல்லப் பெறுவர். அல்லலாகிறது - இத்திருமொழியில் பட்டக்லேசம் .... (கo)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரிய திருமொழி
பதினோராம்பத்து முதல் திருமொழி முற்றிற்று.

ஸூ;—பத்தாம்பாட்டு. (அன்றித்யாதி) "செங்கண்மாலினை - அன்றிட்டாதி கலி கன்றி சொல்" என்றந்வயித்துத் தாத்பர்ய மருளுகிறார் (புண்டரீகேத்யாதி). தன்னை இப்படி காற்றுக்கும் காமனுக்கும் இலக்காக்கிவைத்ததுக்கு, நங்கொடுமையாலே அவன் வரவிட்டதாகச் சொல்லுமித்தனைபோக்கி தத்வமன்றிறே. நான் ஊடினபோது கையைக்காலைப் பிடித்துச் சேரவிட்டுக்கொண்டவன் இப்படி செய்யானிறே. இனிவாராமைக்குஹேது ஆஶ்ரிதர்

http://acharya.org

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பதினோராம் பத்து இரண்டாந் திருமொழி
குன்றமெடுத்து ப்ரவேசம்.

அவ;—குன்றமெடுத்துப்ரவேசம். "என்செய்கேன்" என்றவிடத்திலும்இரங்காதே-பாதக (ஙூ) பதார்த்தங்கள் மிகைத்தான; ரக்ஷகனானவன் கைவிட்டான்; என் கார்யம் ஸ்வயத்ந ஸித்தமாயிருந்தது. எனக்கு இனி ரக்ஷகராக வல்லாருண்டோ என்கிறாள் *.

மூ;—குன்றமெடுத்து மழை தடுத்திளையாரோடும்
மன்றில் குரவை பிணைந்தமாலென்னை மால்செய்தான்
முன்றில் தனிநின்ற பெண்ணைமேல் கிடந்தீர்கின்ற
அன்றிலின் கூட்டைப் பிரிக்ககிற் பவராரகொலோ. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
குன்றம்	கோவர்த்தன பர்வதத்தை	மால்	ஸர்வேஶ்வரன்
எடுத்து	குடையாக எடுத்து	என்னை	என்னை
மழை	(இந்த்ரன்பெய்வித்த கல்வர்ஷத்தால் வந்த நலிவை	மால்செய்தான்	மதி மயங்கப் பண்ணிவிட்டான்;
தடுத்து	நிரஸித்து,	முன்றில்	வாசலிலே
மன்றில்	நாற்சந்தியிலே [டே	தனிநின்ற	ஒப்பற்று நின்ற
இளையாரொடும்	இடைப்பெண்களோ	பெண்ணைமேல்	பனைமரத்திலே
குரவைபிணைந்த	திருக்குரவைகோத்தருளின	கிடந்து	(அஞ்சாதே) கிடந்து
		ஈர்கின்ற	(ஶஸ்த்ரம்போலே) உயிரை நலியாநின்ற

சொல்லிற்றுச்செய்வானுகையாலே, அதிலே அந்பபரனுகயிருக்கவேணுமென்று நினைத்து துளவின் வாசமே வண்டு கொண்டுவந்து ஊதினலையுமென்ருளானையாலே, இவ்வாஶ்ரித பாரதந்த்ர்யத்தைச்ய கவிபாடினுரென்னலாமென்று திருவுள்ளம். (கo).

ஜீயர் திருவடிகளே சரணம்.

அந;—குன்றமெடுத்தின் ப்ரவேசம், கீழ்த்திருமொழியிலே சில பாதகங்களுக்கஞ்சி, அவன் துளவின் வாசத்தைஆசைப்பட்டிருந்தாள். அதுவே ஹேதுவாகப் பின்னையும் அன்றில் முதலானவை நலிய, பொறுக்கமாட்டாதே தானே யத்நம்பண்ணுகைக்கு ஒருப்படுகிறுளென்று ஸங்கதியருளுகிறார் (என்செய்கேனித்யாதி). தூமலரித்யாதியைப் பற்ற (ஸ்வயத்ந ஸிததமாய்)என்றது. ... ... *.

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்றிலே	அன்றில் பக்ஷிகளை	கிற்பவர்	ஸமர்த்தராகக் கடவார்
கூட்டின்	கூட்டில்நின்றும்	ஆர்கொலோ	எந்த மஹாநுபாவரோ
பிரிக்க	பிரித்துவிட		தான்!. (௧)

வ்யா;—முதற்பாட்டு. (குன்றமித்யாதி) அரிய செயலைச்செய்து தன்னை எல்லாரும் காணும்படியாக மன்றிலே இட்டவன், அச்செயலாலே என்னை மன்றிலே நிறுத்தினான். (மூன்றிலித்யாதி) பழையதாக நலிந்துபோருகிற இத்தைப் பரிஹரிப்பாராரென்கிறாள். ஏலக்கோலி நலிவுதாக மன்றிலேபெரிய ஆர்ப்பரவத்தோடே நின்றபெண்ணை மேலேகிடந்து ஈருகின்ற. பெண்ணை-பனை. சஸ்த்ரம் போலே கடுக முடித்துவிடாதே ஈர்ந்து நலியாநின்றதாயிற்று. பிரிப்பனபிரித்து கூடுவன கூட்டித்திரிகிறாளன்றிறே. இனி இத்தால் சொல்லிற்றாயிற் றென்னென்றால்,இவ்வன்றிலின் த்வநி பாதகமாகாதபடி அவனை என் முலையோடே கொடுவந்து சேர்க்க வல்லாரில்லையோ வென்கிறாள். .... (௧)

மூ;—பூங்குருந்தொசித்தானை காய்ந்தரிமாச்செகுத்து
ஆங்கு வேழத்தின் கொம்புகொண்டுவன் பேய்முலை
வாங்கியுண்ட வவ்வாயன்நிற்க விவ்வாயன்வாய்
ஏங்குவேய்ங்குழ லென்னோடாடு மிளைமையே. (௨)

அர;—முதற்பாட்டு. (குன்றமித்யாதி) மால் செய்தானென்றதுக்குத் தாத்பர்யம் (அச்செயலாலே யித்யாதி). "முளரிக்கூட்டத்து" என்று கீழ்த் திருமொழியிலும் சொன்னதாகையாலே அருளுகிறார் (பழையதாக வித்யாதி). (ஏலக்கோலி) முந்துற உத்யோகித்து. கூட்டைப் பிரிக்கையாவது-தான் முற்றத்திலேநில்லாதே உள்ளோநாயகனோடே கண்ணுறங்கிக்கிடந்தால், இந்த கூண்டுக்கும் தனக்கும் பிரிவுண்டாமென்றே சொல்லவேணுமென்று, யதாஶ்ருதம் கூடாதென்று அருளுகிறார் (பிரிப்பனவித்யாதி). ... (௧)

அரு,—இரண்டாம்பாட்டு. (பூமித்யாதி) கீழே அன்றிலின் குரலுக்கு நொந்து கூட்டவல்லராரோவென்று இருக்க, அவ்வளவிலே மாமணிவண்ணர் வாராமையாலே பெண் இப்படி பெண்ணைமேல் அன்றிலின்கையிலே அகப்பட்டு நொந்தாளென்று உடம்புவெளுத்து பண்டலந்தவனைப்போலே குழலூதினோமாகில் வந்தானென்று அறியிருப்பாளென்று குழலூத; இவள் குழல் வாசியறிந்தவளாகையாலே இதுக்கு நோவுபடுகிறாளென்று ஸங்கதி.

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
பூ	(தர்ஶநீயமாகப்) பூத்துக்கிடந்த	வாங்கி	(ஸாதரமாகக்) கையில் வாங்கி
குருந்து	குருந்தமரத்தை	உண்ட	சுவைத்து (அவளை முடித்த)
ஒசித்து	முறித்து,	அவ்வாயன்	அப்படிப்பட்டவாயையுடையனான கண்ணபிரான்
ஆனை	வ்ருஷபங்களை	நிற்க	விப்ரக்ருஷ்டனாய்நிற்க
காய்ந்து	நிரஸித்து,	இவ் ஆயன்	(நம்பி மூத்த பிரானாகிற) இந்த இடையனானவன்
அரிமா	ஶாத்ரவமே வடிவாய் வந்த கேசியை	வாய்	வாயிலே (வைத்து)
செகுத்து	(வாயைக்) கிழித்து	ஏங்கு	ஏங்கி ஊதுகிற
ஆங்கு	அங்கே (பயங்கரமாய் வந்து தோற்றின)	வேய்ங்குழல்	வேய்ங்குழலானது
வேழத்தின்	குவலயா பீடத்தின்	என்னோடு	என்னிடை யாட்டத்திலே (அணுகி)
கொம்பு	தந்தங்களை	இளமை ஆடும்	சிலபாலிஶசேஷ்டைகளைப்பண்ணுகின்றது.
கொண்டு	முறித்தெறிந்து,		
வன்	நெஞ்சில் க்ரௌர்யத்தையுடைய		
பேய்	பூதனையின்		
முலை	(விஷதிக்த(க)மான முலைகளை		

வ்யா;—இரண்டாம்பாட்டு. (பூங்குருந்தித்யாதி) அடியேபிடித்துத் தலையளவும் செல்ல தர்ஶநீயமாம்படி பூத்து நின்ற குருந்தை முறித்து ருஷபங்களை நிரஸித்து கேசிவாயை அநாயாஸேந கிழித்து, அங்கே பயாவஹமாம்படி வந்து தோன்றின குவலயாபீடத்தை நிரஸித்து, அதின் கொம்பை வாங்கி, அவனைக்கண்டு வைத்தும நலிய வேணுமென்று வந்த நெஞ்சில் திண்மையையுடையபூதனை முலையை ஸாதரமாக உண்டு, அவ்வழியே அவள் ப்ராணனை முடித்தவன் நிற்க, இந்த இடையனானவன் வாயிலே வைத்து ஸ்தநஸ்தநத்தோடே நின்று ஏங்கி ஊதுகிற குழலானது என்னோடே பாலிசமான வ்யாபாரங்களைப் பண்ணுகின்றது. .... (௨)

(க) "ஸந்நத்தஸ்ஸுதநுஸதோ ஜ்ஞா ஸங்கேதசஸ்ஸுயமதுரை" என்கிற நம்பி மூத்தபிரானிருப்பது. (பாலிசமான வ்யாபாரங்களை) என்றதுக்கு, மாமணிவண்ணனுக்காக நான் நேர்பட்டபோது ஸாதிக்க ஆமையாதென்றே, மூத்தனுபிருக்கவும் இளமையாலே இப்படி ஊதுகிறது பாலிசக்ருத்யமிறே என்று கருத்து. ... ... (உ)

(க) வி - பு - ௫ - ௨௪ - ௨௧.

மூ;—மல்லொடு கஞ்சனும் துஞ்ச வென்றமணி வண்ணன்
அல்லிமலர்த் தண்டுழாயை நினைந்திருந்தேனையே
எல்லியின் மாருதம் வந்தடும் அதுவன்றியும்
கொல்லை வல்லேற்றின் மணியும் கோயின்மை செய்யுமே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மல்லொடு	(கம்ஸன் ஏவிவந்த) மல்லவர்க்கமும்	மாருதம்	தென்றலானது
கஞ்சனும்	கம்ஸனும்	வந்து	நானிருக்குமிடமே வந்து
துஞ்ச	உயிர்மாள	அடும்	நலிபாநின்றது;
வென்ற	வெற்றிபெற்ற	அதுவன்றியும்	அதுவுமன்றிக்கே
மணிவண்ணன்	எம்பெருமானுடைய	கொல்லை	வெளிநிலங்களிலே (ஸஞ்சரிக்கிற)
அல்லி	இதழ்களையுடைத்தாய்	வல்	வல்லிய
தண்	குளிர்ந்திருந்துள்ள	ஏற்றின்	வ்ருஷபங்களின்
துழாய்மலரை	திருத்துழாய்மாலையை (விரும்பி, அத்தையே)	மணியும்	(கழுத்தில் கட்டப்பட்டுள்ள) மணியின் ஓசையும்
நினைந்திருந்தேனை	நெஞ்சில் நினைத்துக் கொண்டிருக்கிற என்னை	கோயின்மைசெய்யும்	ஆராட்சியில்லாத செயலைச் செய்யாநின்றது. (௩)
எல்லியில்	ஸந்த்யாகாலத்திலே		

வ்யா;—மூன்றாம்பாட்டு (மல்லித்யாதி) அவன் வரவிட்ட மல்லவர்க்கத்தோடே கம்ஸன் முடியும்படி வென்று விரோதிபோகப்பெற்றதாலே ஸ்ரமஹரமான வடிவும் தானுமாயிருக்கிறவன், அப்போதிட்ட வெற்றிமாலையைப் பெறவேணுமென்று ஆசைப்பட்டத்தையே நினைத்துக்கொண்டிருக்கிற என்னை, ஸந்த்யாஸமயத்திலே தென்றலானது வந்து நலியாநின்றது. அதுக்குமேலே வெளிநிலத்திலே நாகைத்தொடர்ந்து அது கைபுகுந்தாலல்லது மீளாதபடியிருக்கிற வ்ருஷபத்தினுடைய கழுத்தில் மணியோசையானது ஆராட்சியில்லாதவிடத்தல் செயலைச்செய்யா நின்றது. .... (௩)

உ, ௩;— மூன்றும்பாட்டு. (மல்லித்யாதி) நம்பி மூத்தபிரான் குழலோசையோயன்றிக்கே காற்றுகளொடுங்கின என்னை அவர் மேய்கிற பசுக்களில் விடைகளும் பாதிக்கிறன வென்கிறுளென்று ஸங்கதி.

"மல்லொடு" என்று ப்ராதாந்யம் சொன்னதுக்குக் கருத்து (அவன் வரவிட்ட) என்றது. (ஆராட்சியில்லாதவிடத்திலே) அராஜகமாகையாலே விசாரிப்பாரில்லாத விடத்திலே. ... ... (௩)

http://acharya.org

மூ;—பொருந்து மாமர மேழுமெய்த புனிதனார்
திருந்து சேவடி யென்மனத்து நினைதோறும்
கருந்தண் மாகடல் கங்குலார்க்கு மதுவன்றியும்
வருந்த வாடை வருமிதற்கினி யென்செய்கேன். (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பொருந்து	தன்னிலே பொருந்தி நின்ற	தண்	ப்ரமஹரமாயிருந்துள்ள
மாமரம் ஏழும்	ஸால வ்ருக்ஷங்களேழையும்	மாகடல்	ஸமுத்ரமானது
எய்த	முறித்தெறிந்த	கங்குல்	இராமுற்றும்
புனிதனார்	பரமபாவநரான பெருமானுடைய	ஆர்க்கும்	கோஷியாநிற்கும்;
			அதுவன்றியும்-;
திரு உந்து	ஐஶ்வர்ய ப்ரகாஶகமான	வாடை	வாடைக்காற்றானது
சேவடி	திருவடிகளை	வருந்த	(நான்) க்லேஶிக்கும்படி
என்மனத்து	என் மனஸ்ஸிலே	வரும்	வந்து வீசாநிற்கும்;
நினைதோறும்	அநுஸந்திக்கும் போதெல்லாம்,	இதற்கு	இதற்குப்(பரிகாரமாக)
கரு	கறுத்து	இனி	இனிமேல்
		என்செய்கேன்	(நான்)என்னசெய்யக்கடவேன். (௪)

வ்யா;—நாலாம்பாட்டு. (பொருந்தித்யாதி) அடிகுறிக்கவொண்ணாதபடி குவியாநிற்கிற மராமரங்களேழையும் எய்து ஆஶ்ரிதவிஷயத்தில் தமக்குண்டான ஓரம் தரைகாணவொண்ணாதபடி யிருக்கிற அவருடைய ஐஶ்வர்ய ப்ரகாசகமான திருவடிகளை அநுஸந்திக்கும்போதெல்லாம் கறுத்த தன்மையை உடைத்தா யிருக்கிற கடல், ராத்திரியிலே என் எளிமை கண்டு மிகைத்துக் கூப்பிடாநிற்கும். அதுக்குமேலே நான் வருந்தும்படியாக பலவானாயிருக்கிற வாடையானது வாராநின்றது. (இதற்கினி யென்செய்கேன்) ஓரபலை இதுக்குக்கடவேனோ? .... (௪)

அரு;—நாலாம்பாட்டு. (பொருந்தித்யாதி) கீழ்ப்பாட்டில் அந்தியில் தென்றலும் மணியோசையும்போய் ராத்ரியுமாய் கடலாலே நோவுபட்ட வென்னை ஸந்த்யாகாலத்திற் குளிர் காற்றும் நலிகிறதென்கிறாளென்றுஸங்கதி.

ஆஶ்ரித விஷயத்திற் பக்ஷபாதமில்லாமை - அபாவநத்வமாய், அதில்லாதவரென்றருளுகிறார் (ஆஶ்ரிதேத்யாதி) திருவுந்து என்றது - குறைந்து, "திருந்து" என்று கிடக்கிறதாய், திருவை உந்துகை - முன்னைத் தள்ளுகையாய், ப்ரகாசிப்பிக்கையென்றருளுகிறார் (ஐஶ்வர்யேத்யாதி) (வருந்துமபடியாக) க்லேசிக்கும்படியாக.... ... ... (௪)

http://acharya.org

மூ;—அன்னை முனிவதும் அன்றிலின் குரலீர்வதும்
மன்னு மறிகடலார்ப்பதும் வளைசோர்வதும்
பொன்னங்கலையல்கு லன்னமென்னடைப்பூங்குழல்
பின்னை மணாளர் திறத்தமாயின பின்னையே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை,
அன்னை	பெற்ற தாயானவள்	அல்குல்	அல்குலையும் [று
முனிவதும்	சீறுவதும்,	அன்னம்	ஹம்ஸத்தினதுபோன்
அன்றிலின்	அன்றில் பக்ஷியின்	மென்	விலக்ஷணமான
குரல்	த்வநியானது	நடை	நடையையும்
ஈர்வதும்	நலிகிறதும்,	பூ	தர்ஶநீயமான
மன்னு	பூமியைச்சுற்றி வேலியாகப் போரக் கடவதாய்	குழல்	கூந்தலையுமுடையளான [கு
மறி	ரக்ஷகமுமான	பின்னை	நப்பின்னைப்பிராட்டிக்
கடல்	ஸமுத்ரமானது	மணாளர்	வல்லபரான பெருமாளுடைய
ஆர்ப்பதும்	கோஷிக்கிறதும், [வை	திறத்தம்	இடையாட்டத்தில்
வளை	கையில் வளைகளான	ஆயினபின்னை	ஈடுபட்டோமான பின்
சோர்வதும்	கழலுவதும் (ஆகிற இவையெல்லாம்),	யே	பிறே (நமக்கு நேர்ந்தன). (ரு)
அம்	அழகிதான [ந்த		
பொன்கலை	பீதாம்பரத்தை யணி		

வ்யா;—அஞ்சாம்பாட்டு. (அன்னையித்யாதி) அவன் ஊர்பகை விளைத்து விட்டானாகில் நாம்இவற்றைவெறுக்கிறதென்? பரிவுடைய தாய் முனிகிறதும், நானும் அவனுமாயிருந்தபோது அநுகூலமான அன்றிலுடைய த்வநி பாதகமாகிறதும், பூமிக்கு வேலியாக ரக்ஷகமாயிருக்கிற கடல் கூப்பிடுகிறதும், ஆபரணமான வளைகழலுகிறதும், பொன்னாலே செய்யப்பட்டு தர்ஶநீயமாயிருக்கிற பரியட்டத்தை யுடைத்தான அல்குலையுடையளாய், அன்னம்போலேயிருக்கிற நடையையுடையளாய், வைத்தகண் வாங்காதே கண்டுகொண்டிருக்கவேண்டும்படி தர்ஶநீயமான திருக்குழலையுடையளான நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபரான வவரிடையாட்டத்தோமான

அரு;—அஞ்சாம்பாட்டு. (அன்னையித்யாதி) ஒருகாலே பாதகபதார்த்தங்களையெல்லாம் அடுக்கினதுக்குத்தாத்பர்யகதநமுகேந ஸங்கதியையும் வெளிப்பிக்கிருர் (அவனித்யாதி), ச (ங)காரங்கள்-விரோதஸூசகங்களென்றுவிவக்ஷித்து அதுக்கதுக்குத்தக்கினதைக்கூட்டி அருளுகிருர் (பரிவித்யாதி). இப்பா

http://acharya.org

பின்பிறே இவை நமக்கு இப்படியாகப் புக்கது. அவருடைய ப்ர ணயித்வங்கண்டு நாம் அகப்பட்டபின்பிறே இவை நமக்கு பாதக மாகப்புக்கது. பூர்வாபரங்களுக்குச் சேர்த்திபோராதாகிலும், பிள்ளையுறங்காவில்லி தாஸர் "பின்னை மணாளன் திறத்தோமான பின்பன்றோ இவை இப்படியாயிற்று; ஸாமாந்யமென்று ஈடுமீடெல்லாம் இடவமையும் என்பாரைப்போலே, அவளோடே ஒருஸம்பந்தம் சொல்லி நலிகிறவை நலிந்தாலென்" என்பராம். .... (ரு)

மூ;—ஆழியும் சங்குமுடைய நங்களடிகள் தாம்
பாழிமையான கனவில் நம்மைப் பகர்வித்தார்
தோழியும் நானு மொழிய வையம் துயின்றது
கோழியும் கூகின்றதில்லைக் கூரிருளாயிற்றே. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆழியும்	திருவாழி யாழ்வானையும் [னையும்	தோழியும்	(ஸமதுக்க ஸுகைகளான) தோழிமார்களும்
சங்கும்	ஸ்ரீ பாஞ்சஜந் யாழ்வா		
உடைய	(நிரூபகமாக) உடையனாய்	நானும் ஒழிய	நானும் தவிர,
		வையம்	(மற்றை) உலகத்தாரனைவரும்
நங்கள்	நமக்கு [ப்வரன்		
அடிகள்தாம்	ஸ்வாமியுமான ஸர்வே	துயின்றது	உறங்காநின்றார்கள்;
நம்மை	நம்மை	கோழியும்	கோழியும்
பாழிமையான	(கரைகாணவொண்ணாதபடி) பரம்பியிருந்துள்ள	கூகின்றது இல்லை	(விடிவுக்கு ஸூசகமாகக்) கூவுகின்றதில்லை;
கனவில்	ஸ்வப்நத்தின் அபரபர்யாயமான ஸம்ஶ்லேஷத்தில்	கூர் இருள்	காடாந்தகாரமானது
		ஆயிற்றே	விடிந்த பின்பும் கால்வாங்கப் பெற்றதில்லையே.
பகர்வித்தார்	கூப்பிடுவித்தான்;		(சு)

ட்டுக்கு க்ரியை காட்டுகிறார் (இவையித்யாதி). உத்தரார்த்தத்தை அநுஸந்தித்து பூர்வார்தமநுஸந்திப்பது அந்வயமென்று திருவுள்ளம்பற்றி, தொகுத்தபாவம் (அவருடையவித்யாதி). (பூர்வாபரங்களுக்கு) பாதகங்களாகநோவுபடுகிற கீழ்மேல்பாட்டுக்களுக்கு. இப்பக்ஷத்திலே சகாரங்களெல்லாம் "வந்து நலியப்பெறும்" என்றுகருத்து. "சோர்வதுமாகத்தக்கதே" என்றுக்ரியைக்கூட்டிக்கொள்வது. "பின்னையே" பின்னையன்றோவென்று சப்தார்த்தம்.... (ரு)

http://acharya.org

வ்யா;—ஆறாம்பாட்டு. (ஆழியித்யாதி) ஸர்வேஶ்வர லக்ஷண மாயிற்றுத் திருவாழியாழ்வானும் ஶ்ரீபாஞ்சஜந்யமும். (பாழிமையான கனவில் நம்மைப் பகர்வித்தார்) பெரிய மேன்மையையுடையவர் கையைக்காலைப் பிடித்துத் தாழாநின்று பரிமாறின பரிமாற்றமாகையாலே, அநுஸந்திக்கப் புக்கால் கரைகாணவொண்ணாதபடியாயிருக்கிற அபர்யாப்த ஸம்ஶ்லேஷ ஸுகத்தாலே நம்மைக்கூப் பிடுவித்தார். (நம்மை) ராஜ்யநிமித்தமாக †சக்ரவர்த்தித் திருமகனைச்சொல்லாததில்லை. (க) "தேநதுக்கே - தேநதுக்கே" என்கிறபடியே ஒரு படியாலும் வாய்திறவாதே, பெருமாள் தாபஸவேஷத்தைப் பார்த்துக் கவர்ந்து நின்று கண்ணநீரை விழவிட்டாளிறே. இப்படியிருக்கை ப்ராப்தமாயிருக்க, நம்மைக்கூப்பிடுவித்தார். (தோழியித்யாதி) ஸமாநஸுக துக்கைகளான எங்களையொழிய எல்லாரும் உறங்கிற்று. விடிவுக்கு ப்ராப்தமான இதுவுங்கூட அரிதாகாநின்றது. (கூரிருளாயிற்றே) விடிந்த பின்பும் இருள் கால் வாங்குகிறதுமில்லை. .... (சா)

மூ;—காமன்றனக்கு முறையல்லேன் கடல்வண்ணனார்
மாமணவாளரெனக்குத்தான் மகன் சொல்லில்
யாமங்கள்தோறெரிவீசு மென்னிளங்கொங்கைகள்
மாமணிவண்ணர்திறத்தவாய் வளர்கின்றவே. (எ)

அ;— ஏழாம்பாட்டு. (ஆழியித்யாதி) பகலெல்லாம் அன்னை முனிவதும், ஸந்த்யையில் அன்றில்முதலானவைபாதிப்பதும், ராத்ரியெல்லாம் கடல் நலிவதும், விடியுங்காலத்தில்காலால் துகையுண்கிறதுமாயிருக்கிறவற்றையெல்லாம் சொல்லிக் கூப்பிட்டாள். அது பொறுக்கமாட்டாதே புறப்பட்டுலோக யாத்ரையைப் பார்க்க ஒருப்படவும் "த்ருடியுகாயதே - த்ருடியுகாயதே" என்கிற கணக்கிலே இருள்விரியாமையாலே அதுக்கும் நோவுபடுகிறாளென்று ஸங்கதி.

"பாழிமை" என்றது-பாப்பாம், "கனவில்" என்றது - ஸ்வப்நமென்னலாம்படியான ஸம்ஶ்லேஷமாய்த்தாத்பர்யமருளுகிறார் (பெரியவித்யாதி). என்னை என்றதே, "நம்மை" என்று ஆத்மநி பஹுவசநமாகச் சொல்லுகைக்குத் தாத்பர்ய மருளுகிறார் (ராஜ்யமித்யாதி). கோழிகூவென்னும் என்று வெளிப்போம். "கோழியும் கூகின்றதில்லை" என்கிறது-விடிவைஸூசிப்பிக்கிற கோழியை என்று தாத்பர்யமருளுகிறார் (விடிவுக்கித்யாதி).... ... (கூ)

(க) ரா-

† (பா) சக்ரவர்த்திமகன்

http://acharya.org

பதம்.	உரை.
காமன் தனக்கு	மந்மதனுக்கு
முறையல்லேன்	(நான் நலியப் படுகைக்கு) ப்ராப்தி யுடையேனல்லேன்;
கடல்	கடல் போலே (ஶ்ரமஹரமான)
வண்ணனார்	வடிவை யுடைய கண்ணபிரான்
மாமணவாளர்	(எனக்கு) ஶ்லாக்யரான வல்லபர், (இவ்வழியாலே)
தான்	அந்த மந்மதனானவன்
எனக்கு	எனக்கு
மகன்	மகனாகப்பெற்றான்;
சொல்லில்	(இவன் என்னை நலிகிறபடியைச்)சொல்லப்புக்கால்

பதம்.	உரை.
யாமங்கள்தோறு	சாமங்கள்தோறும்
எரி	காமாக்நியை
வீசும்	தூவாநின்றான்;
என்	என்னுடைய
இளங்கொங்கைகள்	இளமுலைகளானவை
மாமணி	நீலமணிபோன்ற
வண்ணர்	திருநிறத்தையுடைய ஸர்வேஶ்வரனுடைய
திறத்த ஆய்	திறத்தில் படுகையையே பயனாக வுடையனவாய்
வளர்கின்ற	வளராநின்றன. (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (காமன்றனக்கு முறையல்லேன்) காமனுக்கு நான்பாத்ய(ஸ்)கோடியிலே யாகைக்கு ஒருப்ராப்தியில்லை. (கடலித்யாதி) எனக்கு ஶ்லாக்யரான வல்லபராய் ஶ்ரமஹரமான வடிவையுடையவர். அவ்வழியாலே தான் எனக்கு நன்மகன். மாதாபிதாக்களைச்சேரவைத்து ரக்ஷிக்குமதிறே புத்ரக்ருத்யமாகிறது. அரியன வெல்லாம் செய்தாகிலும் மாதாவை நோக்க வேணுமே? (சொல்லில்) இப்படி ரக்ஷிக்கை முறையாயிருக்க, அதுக்கு விபரீதமாக நலிகிறபடியைச் சொல்லப்புகில் அதுக்கு இவனோடு எனக்கு ஒருப்ராப்தியில்லை.

இவன் இப்படி விபரீதமாகச்செய்கிற செயலேதென்னில்? (யாமங்கள்தோறெரிவீசும்) சாமங்கள்தோறும் காமாக்நியைத்

அரு.—ஏழாம்பாட்டு. (காமனித்யாதி) முறைமையில்லாத அன்றில் முதலானவற்றையும் பருவம்கழிந்ததாயையும் சொல்லுகிறதென்? வயிற்றில் பிறந்தாரும், இணைபிரியாதே உரமேறியிருக்குமவையும் அவன் பக்ஷத்தையே பற்றி என்னை நலிகிறபடி வாசாமகோசரமென்றத்தைச்சொல்லி நோவுபடுகிறாளென்று ஸங்கதி.

(அரியன) என்றது-பிதாவாகிலும் அவர்மேலே அம்பைத் தொடுக்கை. (மாதாவைநோக்குகை), அவளை அழைத்துக்கொண்டு சேர்க்கை. அவனுக்குப்

http://acharya.org

தூவாநின்றான். தனக்கு நான் அநுவர்த்தநீயையான ஆகாரம்கிடக்கச்செய்தே, என்னுடைய இம் முலைகள் தான் அவனுக்கென்றேயாயிற்று வளருகிறது. .... (எ)

மூ;—மஞ்சுறு மாலிருஞ்சோலை நின்ற மணாளனார்
நெஞ்சுநிறைகொண்டு போயினார்நினைக்கின்றிலர்
வெஞ்சுடர் போய் விடியாம லெவ்விடம்புக்கதோ
நைஞ்சுடலம் துயின்றால் நமக்கினிநல்லதே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மஞ்சு உறு	மேகபதத்தளவு மோங்கின	விடியாமல்	உதியாமல்
மாலிருஞ்சோலை	திருமாலிருஞ் சோலைமலையிலே	எவ்விடம்	எவ்விடத்திலே
நின்ற	எழுந்தருளியிருக்கிற	போய்புக்கதோ	சென்றொளித்தானோ?;
மணாளனார்	எம்பெருமான்	இனி	இப்படி பாத(?)ஸாமக்ரிகள் மிகைத்தபின்பு
நெஞ்சில்	(என்னுடைய) நெஞ்சிலுள்ள	உடலம்	(நம்முடைய) ஶரீரமானது
நிறை	அடக்கத்தை	நைஞ்சு	ஶிதிலமாய்
கொண்டு	அபஹரித்துக் கொண்டு	துயின்றால்	முடியப்பெறில்
போயினார்	எழுந்தருளிவிட்டார்	நமக்கு	நமக்கு
நினைக்கின்றிலர்	(இத்தலையை ஒருகாலும்) நினைக்கிறிலர்;	நல்லதே	நல்லவாழ்ச்சியே. (அ)
வெஞ்சுடர்	ஸூர்யனானவன்		

வ்யா.—எட்டாம்பாட்டு. (மஞ்சித்யாதி) மேகபதத்தளவும் செல்லவோங்கின சிகரத்தையுடைத்தான திருமலையிலே, தமக்குக்கலவிருக்கையான ஶ்ரீவைகுண்டத்தைவிட்டு, இங்கே நம்முடையசெவ்வி

பிள்ளையான முறைமையால் பிள்ளையென்னலாம்படியான காயனேயோ? என்மார்விலே வளர்ந்த இவையும் எனக்கு அடங்காதே படுத்துகிற பாடென்னென்கிறாளென்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (என்னுடைய வித்யாதி).

அந.—எட்டாம்பாட்டு. (மஞ்சுறுவித்யாதி) வயிற்றில்பிறந்தாரை வெறுக்கவேணுமோ? கைப்பற்றின கணவனுக்குக் கண்ணோட்டமில்லை; நாட்டுக்குக் கண்காட்டியான லோகசக்ஷுஸ்ஸும் போனவிடம் தெரிந்ததில்லை. இனி நான் செய்வதென்னென்று விசாரப்பட்டு, விரஹம் தின்ற உடம்பு இனி இருக்கப்புகுகிறதோ? தானேபோமே; அதுபோனால் இனி நமக்கு து:க்கமே இல்லை என்று உடம்பில் நைராஶ்யத்தைச் சொல்லுகிறாளென்று ஸங்கதி.

http://acharya.org

யறிந்து புஜிக்கைக்கு அவஸர ப்ரதீக்ஷரா யிருக்கிறவர், நெஞ்சிலடக்கத்தைக் கொண்டுபோனார். "இத்தலையை இப்படி ஸர்வஸ்வாபஹாரம் பண்ணினோமாகாதே" என்று நெஞ்சில் இத்தனை இரக்கமுமின்றிக்கே இராநின்றார்.

(வெஞ்சுடரித்யாதி) ரக்ஷகன் பாதகனானவாறே, அவன் பரிகரமும் பாத (ஈஷ) கமாமத்தனையாகாதே?; அவன்பாதகமாகப்புக்கவாறே அவனை அநுவர்த்திக்க அவன் பரிகாரமும் பாத(ஈஷ)கமாகப்புக்கது. இவள் ஸந்நிதியிலே வர்த்திக்கில் இவளை அநுவர்த்தித்துக்கொண்டு †ப்ராப்தகாலத்திலே விடியவேணுமென்று நினைத்தது செய்யாதே போனவிடம் தெரியாதபடிபோனான். (எவ்விடம்புக்கதோ?) இவன் ஆஜ்ஞைநடையாடாததோரிடம் தேடிப்போனானே அவன். அவன்பாதகனானபின்பு பரிகரமும் பாதகமாயிற்று. இனி இருந்தபடியாலே சரீரமானது சிதிலமாய் முடிந்து பிழைக்குமித்தனைபோக்கி, இனிநமக்கொரு ஜீவிக்கையென்றொரு பொருளில்லையாகாதே?. .... (அ)

மூ;—காமன்கணைக் கோரிலக்கமாய் நலத்தின்மிகு
பூமருகோல நம்பெண்மை சிந்தித்திராதுபோய்
தூமலர்நீர்கொடு தோழீ நாம்தொழுதேத்திநால்
கார்முகில்வண்ணரைக் கண்களால்காணலாங்கொலோ.

பதம்.	உரை.	பதம்.	உரை.
தோழீ,	வாராய் தோழீ!;	கோலம்	ஒப்பனையழகாலும்
காமன்	மந்மதனுடைய	மிகு	மிக்கவை லக்ஷண்யத்தையுடைய
கணைக்கு	பாணமென்று பேர் பெற்ற வற்றுக்கெல்லாம்	நம்	நம்முடைய
		பெண்மை	ஸ்த்ரீத்வத்தை
ஓர் இலக்கமாய்	ஓர் லக்ஷ்யமாய் (நோவுபடுவதிற்காட்டில்)	சிந்தித்து	புத்திபண்ணி
		இராது	"தத்தஸ்ய ஸத்ருஶம்" என்றிருக்குமிருப்பு தவிர்ந்து
நலத்தில்	ஆத்ம குணங்களாலும்		
பூமரு	ஸ்ப்ருஹணீயமான		

விடியாதென்னலாயிருக்க, "எவ்விடம்புக்கதோ" என்பானென்னென்ன வருளுகிறார் (இவனித்யாதி). ஸ்வாமி ஸந்நிதியிலிருந்தால் ஸ்வாமிநியான தான் சொன்னது செய்யவேண்டிவருமென்று, உபயவிபூதியைவிட்டு எங்கே போயிற்றோவென்று கருத்து. ... ... (அ)

† (பா) ப்ராதக்காலத்திலே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
போய்	அவனிருக்குமிடமே தப்போய்	வண்ணரை	வடிவை யுடைய எம்பெருமானை
தூ	பரிசுத்தமான	தொழுது	வணங்கி [னால்,
மலர்	புஷ்பங்களையும் [ம்	ஏத்தினால்	ஸ்தோத்ரம் பண்ணி
நீர்	புண்ய தீர்த்தத்தையு	கண்களால்	(அவரைக்) கண்களாலே
கொடு	கையில் கொண்டு புக்கு		
நாம்	நாமிருவருமாக	காணலாம்கொலோ	ஸேவிக்கப் பெறுவோமோ?. (௯)
கார்முகில்	காளமேகம்போன்ற		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (காமனித்யாதி) அவன் முறை தப்பிநின்றான். அவன் பரிகரமும் முறைதப்பி நின்றது. இனி நாமும் முறைதப்பி நின்றாகிலும் ஜீவிக்குமத்தனையென்கிறாள்.

"காமனுடையஅம்பு" என்று பேர்பெற்றவற்றுக்கெல்லாம் ஓரிலக்காய்.அவன்றன்னை(க)"ஐங்கணைவில்லி" என்னக்கடவதிறே.ஓரம்பை விடும்போதும் ஐந்தம்போடும்கூடியிறேயிருப்பது. காமனுடையசர வர்ஷத்துக்கு இலக்காய் நோவுபடாநிற்க. (நலமித்யாதி) நலம் மிக்க வாத்மகுணங்களோடும் மிக்க ஒப்பனையோடும் கூடியிருக்கிறநாம், அவன்றானே வரும்படி யிருக்கையொழிய, அவனிருந்தவிடத்தேற நாமே புறப்பட்டுப்போகையாகிறவிது,நம்முடையநாண் மடம் அச்சம் துடக்கமான ஆத்மகுணங்களுக்குப்போராது. ஒப்பனையழகுக்

அந;— ஒன்பதாம்பாட்டு. (காமன்கணைக்கித்யாதி) கீழேஉடம்பில்நைராஶ்யம் பிறந்தாலும், ஆசை முடிய வொட்டாமையாலே முறையழித்தாகிலும் பெறுவோ மென்கிறா ளென்ற ஸங்கதியை உட்கொண்டு தோழியின் சித்த ஸமாதாநம் பண்ணும் முகத்தாலே அருளுகிறார் (அவனித்யாதி).

"கணை" என்றத்தை ஜாத்யபிப்ராயமாக்கி அருளுகிறார்(காமனுடையவித்யாதி). இவனுக்குள்ளபாணங்களெல்லாம்கூடி ஐந்தேயன்றோ? ஜாத்யேகவசநமாக பஹுவாகச்சொல்லுவானென்னென்னவருளுகிறார் (ஐங்கணையித்யாதி). இவனுக்கு இதுவே நிரூபகமாக விருக்கையாலே, ஓரம்புபொகட்டாலும் ஐங்கணையோடு கூடியே யிருக்கும்படி, அரவிந்தாதிகள் கனத்திருக்கையாலே, அவை யெல்லா வற்றுக்கும் இலக்கானே னென்கிறாளென்று விவக்ஷித்து எடுத்த பாசுரத்துக்குத் தாத்பர்ய மருளுகிறார் (ஓரித்யாதி). பலிதார்த்தம் (காமனுடையவித்யாதி).

(க) தி-மொ-௯-௩-௭.

http://acharya.org

கும்போராது. நம்முடையநிருபாதிக ஸ்த்ரீத்வத்துக்கும்போராது. என்றுஇவற்றை மறைத்துக்கொண்டிராதே,(போய்) அவன்வரவிருக்கை தவிர்ந்து இனி நாய்போய்.

(தூமலரித்யாதி) உபாஸநத்தைவிதிக்கிற சாஸ்த்ரத்தில் சொல்லுகிறக்ரமம்தப்பாதபடி நாம் உபாஸித்தால், (நாம்) அவன்செய்யக் கடவற்றை நாமும் செய்தால், அவன்தொழுமத்தை நீ கொள்ள வேணுமென்று என்னைஇசைவிக்கைக்கு நீபடும்பாடறிதியே? ப்ரணயிநியான ஏற்றத்தோடேயிருந்து பெறுமது தவிர்ந்தாலும், பக்திமான்கள் பெறும்பேறு பெறத்தட்டில்லையே. முந்துற (க)"భక్త్యాత్వనన్యయాశక్యః - பக்த்யா த்வநந்யயாசக்யः" என்றுனே; (உ)"నమే మోఘంవచః భవేత్ - நமேமோகம் வசோபவேத்"என்று முண்டே. அவன்பக்கலிலே, ஶ்ரமஹரமான வடிவை யுடையவரைக் காண வேணுமென்று விடாய்த்துப் பட்டினிவிடுகிற கண்களாலே காணலாமாகில்ஒருமுறைபார்த்திருக்கிறது தானென்? .... (கூ)

மூ;—வென்றுவிடையுடனேழடர்த்தவடிகளை
மன்றின்மலிபுகழ் மங்கைமன்கலிகன்றிசொல்
ஒன்றுநின்றவொன்பது முரைப்பவர்தங்கள்மேல்
என்று நில்லாவினையொன்றும் சொல்லிலுலகிலே. (க0)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வென்றி	ஜயிஷ்ணுவாய்,	ஒன்று நின்ற ஒன்பதும்	இப் பத்துப் பாட்டுக்களையும்
விடை ஏழ்	வ்ருஷபங்களேழையும்	உரைப்பவர் தங்கள்மேல்	அநுஸந்திப்பார் பக்கலில் [மும்
உடன்அடர்த்த	ஸமூலமாக நிரஸித்தருளின	வினைஒன்றும்	ஒரு விதமான துன்பமும்
அடிகளை	எம்பெருமான் விஷயமாக,	என்றும்	என்றைக்கும்
மன்றில்	நாற்சந்திகள் தோறும்	நில்லா	இருக்கப்பெறாது ; (இவ்வளவேயன்றிக்கே,)
மலி	நிறைந்த	சொல்லில்	(மேல் பெறப் புகுகிற பேற்றின் பெருமையைச்) சொல்லப்புக்கால்
புகழ்	புகழையுடையராய்		
மங்கை	திருமங்கைக்கு		
மன்	நிர்வாஹகரான	உலகிலே	அவர்களிருந்த தேசத்திலுங்கூட
கலிகன்றி	ஆழ்வார்		
சொல்	அருளிச்செய்த		[வினை ஒன்றும் நில்லா-.] (க0)

(க) கீ-கக-ருச. (உ) பாரத.

http://acharya.org

வ்யா.—பத்தாம்பாட்டு. (வென்றியித்யாதி) மிக்கசெயலையுடையவாய், புக்ககார்யத்தில் பிற்காலிக்கையன்றிக்கே யிருக்கிற வ்ருஷபங்களேழையும் ஊட்டியாகநிரஸித்துத் தன்னைக்கொண்டு தப்பினவ்வாமியை. (மன்றிலித்யாதி) நால்வர் இருவர் திரண்டவிடமெங்கும்"இவ்வாழ்வார்,பாத(ஈ)கபதார்த்தங்களின்கையிலேபட்டபாடே?" என்று இவர் வார்த்தையேயாயிருக்கும். கீழ் ஒன்பதுபாட்டாலும் பட்டநலிவும், இதொருபாட்டில் நலிவுமானால் இதுவேமிக்கு வாசாமகோசரமாயிருக்கையாலே சொல்லிற்றில்லை.

(என்றுநில்லாவினையொன்றும்) ப்ராப்திப்ரதிபந்தகமான கர்மங்கள் சிலநாள்போய் சிலநாள்நிற்கையன்றிக்கே ஒருநாளும் ஒன்றும் நில்லாது. (சொல்லில்) இவ்வளவன்றிக்கேமேல் பெறப்புகுகிற பேற்றின்கனத்தைச் சொல்லப்புகில். (உலகிலே) வருந்திபனைநிழல்போலேதங்களளவில் போகையன்றிக்கே இவர்கள் இருந்ததேசத்திலும் கூடவின்றிக்கே ஒழியும். பாதகபதார்த்தங்களின் கையிலே நோவுபடாதே,அவைதானே அநுகூலமாம்படிஅவனோடேநித்யஸம்ஶ்லேஷம் பண்ணப்பெறுவர். .... (க0)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

பெரியதிருமொழி
பதினோராம்பத்து இரண்டாந்திருமொழி
முற்றிற்று.

அரு;— பத்தாம்பாட்டு. (வென்றி யித்யாதி). "பத்தும்" என்று கூட்டிச் சொல்லாதே, பிரித்துச்சொல்லுவானென்னென்ன வருளுகிறார் (கீழேயித்யாதி).கீழெல்லாம் அவனைத்தாம்பெருமையாலேபாத(ஈ)கபதார்த்தங்கள் கையிலேநோவுபட்டு வ்யஸநத்தைச் சொல்லிக்கூப்பிட, கண்ணன் மர்மஜ்ஞனாகையாலே நப்பின்னைக்காகத் தான் கருமாரிபாய ஒருப்பட்டத்தை நினைப்பூட்டத்திடுக்கிட்டுவா,ளேறுகாணத்தேளேறிமாயுமாபோலே நோவுபட்டிருக்க,அநந்தரம்விடைகள்வென்றபடியை,க(ஃ)தஞ்சித்ப்ரதிஸந்தாநம் பண்ணி, பலஶ்ருதி சொல்லித் தலைக்கட்டுகிறாரென்று திருவுள்ளம். (சொல்லிற்றில்லை) பத்தென்று கூட்டிச்சொல்லிற்றில்லை. ... ... (க0)

ஜீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பதினோராம்பத்து மூன்றாந் திருமொழி

மன்னிலங்கு ப்ரவேசம்.

வ்யா;—மன்னிலங்கு ப்ரவேசம். பிரிந்தவன்று தொடங்கி பாதக பதார்த்தங்களாலே நோவுபட்டு, அத்தாலே மிகவும் அவஸந்நையாய், நம்மை உபாஸ்யகோடியிலே நினைத்து, அவன் தான் "வேணுமாகில் நம்மை உபாஸித்துவந்து பெறுகிறான்" என்று நாம் தலைமைகொண்டாடி யிருந்தது அமையும் ; அவனை உபாஸ்யனாகக் கொண்டு நாம் உபாஸித்துப் போருமித்தனையென்று அதிலே ஒருப் பட்டார் கீழ்.

(க) " 'காமன்கணைக்கோரிலக்கமாய்' என்கிறபடியே இத்தனை பொறுப்பானொருவனல்லனே அவன், அநந்தரம் வந்துமுகம்காட்டி அரைக்ஷணம் தாழ்க்கும் காட்டில் இத்தனை ஸாஹஸத்திலே ஒருப் படக்கடவதோ? இத்தலை பெறுகைக்கு எதிர் சூழல் புக்குத் திரிந் தேன் நானல்லேனோ? என்னதன்றோக்லேசம்; ஜந்மவ்ருத்தாதி களால் குறையநின்றார்களேயாகிலும் நம்மையொழியச் செல்லாமை யுண்டானால் பின்னை அவர்களையொழிய ஜீவிப்பனோ நான். ஆஶ்ரித ஸ்பர்ஶமுள்ளத்ரவ்யமொழிய எனக்குத் தாரகமுண்டோ" என்று அவன் செல்லாமை யடங்கலும்காட்ட, அவற்றையடைய அநுஸந் தித்து, பிபாஸிதனுக்குக் குடித்ததண்ணீர் தாஹசாந்திக்கு உட லாகை தவிர்ந்து மேன்மேலென விடாய்க்குடலாமாபோலே, அவ் வநுஸந்தாநந்தான் மேலே விடாயைப் பிறப்பிக்க, அத்தாலேபோர நோவுபட்டுப்பின்னையும் அவனைக்கிட்டி நித்யாநுபவம் பண்ணப்

அரு;— மன்னிலங்கின் ப்ரவேசம். கீழிரண்டு திருமொழிக்கும் ஸங் கதி யருளுகிறார் (பிரிந்தவித்யாதி).

(இத்தனை) என்றது-மஹிஷி ஸ்வாக்ஷணத்திலே தானே ஒருப படுகை யை. கீழ், போது விடியாதே " கண்களால் காணலாங்கொலோ" என்றவள் இத்திருமொழியிலே " மன்னிலங்கு " இத்யாதியாலே, " காணீர் " என்று எல்லாரையும் பார்த்துத் தான் அவன் குணங்களுக்குத் தோற்றபடியைச் சொல்லும்போது, போது விடிந்ததாக வேண்டுகையாலே அவன் வாராதே இவளுக்குப் போதுவிடியாதென்று அவன் வந்து சேரவிட்டுக்கொண்ட படி களை, மேற்பாட்டுக்களை அடைவேகடாக்ஷித்தருளுகிறார் (அநந்தரமித்யாதி).(*)

(க) கக-உ-கூ-

http://acharya.org

பெற்றிலோமேயாகிலும் "இவ்விடாயும் த்வரையுமெல்லாம் இவ்விஷயத்திலாகப் பெற்றோமிறே" என்னுமிவ்வளவால் வந்தத்ருப்தியோடே தலைக்கட்டிற்றாயிருக்கிறது. ....

மூ;— மன்னிலங்கு பாரதத்துத் தேரூர்ந்து மாவலியைப்
பொன்னிலங்கு திண்விலங்கில் வைத்துப் பொருகடல்சூழ்
தென்னிலங்கை யீடழித்த தேவர்க்கிது காணீர்
என்னிலங்கு சங்கோ டெழில் தோற்றிருந்தேனே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மன்	ராஜலோகத்தாலே	சூழ்	சூழப்பட்டதாய்
இலங்கு	விளங்காநின்றுள்ள	தென்	தக்ஷிண திக்கிலுள்ள
பாரதத்து	பாரதயுத்தத்திலே	இலங்கை	லங்கையின்
தேர்	(அர்ஜுந னுடைய) தேரை	ஈடு	பெருமையை
		அழித்த	அழித்தருளின
ஊர்ந்து	(ஸாரதியாய் நின்று) நடத்தி,	தேவர்க்கு	எம்பெருமானுக்கு
		என்	என்னுடைய
மாவலியை	மஹாபலியை	இலங்கு	ஒளிமிக்க
பொன்னில ங்கு	ஹிரண்யமயமாய்	சங்கோடு	கைவளையோடு
		எழில்	மேனிநிறத்தையும்
திண்	திண்ணிதான	தோற்றிருந்தே ன்	இழந்திராநின்றேன்;
விலங்கில்	விலங்கிலே		
வைத்து	சிறையிட்டுவைத்து	இது காணீர்	(அவன் ஆஶ்ரித ரக்ஷணம் பண்ணும்பரிசு) இதுகிடீகோள். (க)
பொரு	அலையெறிகிற		
கடல்	கடலாலே		

வ்யா;— முதற்பாட்டு. (மன்னிலங்கு பாரதத்துத் தேரூர்ந்து) துர்யோதநரும் எல்லாம் அதிரதரான ராஜாக்களேயாயிற்று. ராஜலோகத்தாலே உஜ்ஜ்வலமான பாரதஸமரத்திலே ரதியாய் நிற்கையன்றிக்கே ஸாரதியானானாயிற்று. தான் ரதியாய் நின்றால் ஆஶ்ரிதன்தலையில் வெற்றிகிடவாதென்று, அதுக்காக அவனை ரதியாக்கித் தான்தாழநின்று ஸாரத்யம் பண்ணினானாயிற்று (க)"ஸர்வலோகேஶ்வர: ...

அரு;— முதற்பாட்டு. (மன்னித்யாதி) "இப்படி ஆஶ்ரித விஷயத்தில் தன்னைத் தாழவிட்டபடியால் இனிநமக்கு ஜயம் வருவதில்லை" என்று த்ருத

(க) கீதாபாஷ்யம்.

http://acharya.org

-ஸர்வலோகஸாக்ஷிகஞ்சகார'' என்றும் (க) "தேசமறியவோர்ச் சாரதியாய்ச் சென்று" என்றும் சொல்லுகிறபடியே "இவன் இப்படி ஒரு விஷயத்திலே பக்ஷபதித்தா னென்றறிந்தால் நம் கார்யமும் முடிந்ததன்று" என்றுகைவாங்கவிறே அடுப்பது. (உ) "-ஏவம்ஜ்ஞாத்வாபி ஸர்வாத்மநாந்த:" பாஹ்யசக்ஷுஸ்ஸுபோன மாத்ரமேயன்றிக்கே ஆந்தர த்ருஷ்டியும் போயிற்று.

(மாவலி யித்யாதி) ஆஶ்ரிதார்த்தமாகத் தன்னைத் தாழவிட்டு ஸாரத்யம்பண்ணினானென்றுமிவ்வளவேயோ தனக்கு; ஔதார்யம் பண்ணினவனைச் சிறையிட்டுவைப்பதும் செய்திலனோ? ஔதார்யம் பண்ணினானாகில் சிறையிட்டு வைத்ததென் னென்னில்; அவன் பண்ணின ஔதார்யத்திலும் இந்த்ர னிரப்பே திருவுள்ளத்திலே பட்டுக் கிடந்தது. (௩) "கொண்டானை யல்லால் கொடுத்தாரை யார் பழிப்பார்" என்றார்களிறே அடியறிவார்; தன்னதல்லாதத்தைத் தன்னதாக்கிக் கொடுத்தவனிருக்க, தன்னுடைமை தன்னையே அவனதாக்கி நீர்வார்க்கத்தன்னதல்லாததொன்றுபெற்றானாகக்கொண்ட அந்நீர்மை யுடையவனைப் பழிசொல்லாநிற்பர்கள்; நிரூபித்தால் மஹாபலியையன்றோ நெல்லிலே வைத்துத் தெறிக்கவேண்டுவது. நம்முடைய ஆத்மஸமர்பணம்போலே இருப்பதொன்றிறே அவ ராஷ்ட்ரன் கைவாங்கி யன்றோ இருக்க வடுப்பது, என்னும் சங்கையிலே அருளுகிறார் (ஸர்வேத்யாதி போயிற்றென்னு மளவும்).

ஔதார்யம் ஸங்கிஹிதமாயிருக்கவும், இரப்பு அதீதமாயிருக்கவும் திருவுள்ளத்திலே தோன்றுமைக்கு அடியென்னென்னவருளுகிறார் (கொண்டானை யித்யாதி). (ஆர் பழிப்பார்) பழிப்பாரைக் காணுமே லோகத்தி லென்றபடி. எடுத்த பாசுரத்துக்குத் தாத்பர்ய மருளுகிறார் (தன்னதித்யாதி). தன்னதல்லாதத்தைத் தான் பெற்றானும்படி அவனிருந்தால், இவன் கொடுத்தால் குற்றமோ? (ச) "-உதாராஸ் ஸர்வஏவைதே" என்கிற விடத்திற்போலே அவன் நீர்மை குணத்தைக் கொடுத்தானென்னலாமே யென்ன; அங்ஙன் சொல்லலா மென்றதுக்கு ஒரு த்ருஷ்டாந்தம் காட்டுகிறார் (நம்முடைய வித்யாதி). இத்தால் நம்முடைய ஆத்ம ஸமர்பணத்தால் தன் உபாய பாவம் நிலை நின்று அவன் கார்யம் செய்கிறாப்போலே, அவ்வளவைக்கொண்டு தலையறுதே சிறையிட்டு வைத்தான், மேலேராஜ்யம்கொடுக்க வேண்டி என்று கருத்து.

(க) தி-வாய்-எ-ரு-சு- (உ) பார- (௩) க-திருவ-எகூ- (ச) கீ-எ-கஅ.

னுடைய ஔதார்யமும். இவன் ராஜ்யம் பண்ணுநிற்கச் செய்தேயிறே அத்தைத் தவிர்ந்தது; அதுக்காக இவனை ஒரு காலத்திலே பழையபடியே ராஜ்யத்தில் வைக்கிறோமென்று அவ்வளவுஞ் செல்ல ஶ்லாக்யமான விலங்கில்வைத்தான்.

(பொருகடலித்யாதி) கடலை அகழாக வுடைத்தாய் உறுதி பண்ணிக் கொடுத்த ப்ரஹ்மாதிகளுக்கும் பேர்கேட்க அஞ்சவேண்டுமூரை. (ஈடழித்த தேவர்க்கு) ப்ரணயிநிகார்யம் செய்தாராய், நிறம்பெற்றிருக்கிறவர்க்கு. நான் வந்தேறியாயும் ஸ்வாபாவிகமாயுமுண்டான என்னுடைய ஆபரணங்களை இழந்திருக்கிறவிப்போது கிடிகோள், அவர் ஆஶ்ரிதார்த்தமாகத் தம்மைத்தாழவிட்டு ஸாரத்யம் பண்ணியும், இரப்பாளனாயும், தம்மைப்பேணாதே அம்பேற்றும் பண்ணின வ்யாபாரங்களடைய நமக்குப்பலித்தபடி இதுகிடிகோள்.

மூ;— இருந்தா னென்னுள்ளத் திறைவன் கறைசேர்
பருந்தாள் களிற்றுக் கருள்செய்த செங்கண்
பெருந்தோள் நெடுமாலைப் பேர்பாடி யாட
வருந்தா தென்கொங்கை யொளிமன்னு மன்னே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்னே	—தாய்போன்றஸகியே!	தோள்	திருத் தோள்களை யுடையனாய்,
என்உள்ளத்து	என்னுடைய ஹ்ருதயத்திலே	நெடு	ஸர்வஸ்மாத்பரனை
இருந்தான்	ஸர்வதா ஸந்நிஹிதனாய்,	மால்	எம்பெருமானுடைய
இறைவன்	(எனக்கு) ப்ராப்தசேஷியாய்,	பேரை	திருநாமங்களை
கறைசேர்	உரல்போன்று	பாடி	வாயாரப் (பாடி)
பரு	பருத்திருந்துள்ள	ஆட	(அதற்கேற்க) நர்த்தநம்பண்ண,
தாள்	காலையுடைய		
களிற்றுக்கு	ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுக்கு		
அருள்செய்த	க்ருபை பண்ணினவனாய்,	என் கொங்கை	என் முலைகளானவை
செங்கண்	புண்டரீகாக்ஷனாய்	வருந்ாது	வருத்தமற்று
பெரு	(ஸர்வ நிர்வாஹகத்வ ஸூசகமாய்)பெருத்த	ஒளி மன்னும்	தன்னிறம் பெற்று வாராநின்றன. (௨)

பாட்டுக்கெல்லாம் தொகுத்தபாவம் (அவராஶ்ரிதேத்யாதி). தன்னோடு தாழ நின்று பரிமாறினதும், தன்னுடைய ஆத்மாத்மீயங்களைத் தனக்காக்கிக் கொண்டதும், தென்றல் முதலான விரோதிகளெல்லாவற்றாலு முண்டான நோவுதீர்த்ததும் தனக்குப்பலிக்கையாலே இவ்வபதாநங்களை, அநுஸந்தித்து ஹ்ருஷ்டையா யிருந்தாளென்று கருத்து... ... ... (௧)

http://acharya.org

அ௫.—நாலாம்பாட்டு, (கூடாவித்யாதி) வாகிந்த்ரிய கார்யங்கள் இரண்டாகையாலே அதிலே விடுபேச்சை நிந்தித்து ப்ரபந்த நிஷ்ட்ட கார்யத்தையும் க்ஷேபிக்கிருரென்று ஸங்கதி,

(பரிமாருத) நடையாடாத. ... ... (௪)

http://acharya.org

மூ;—மையார்கடலும் மணிவரையும் மாமுகிலும்
கொய்யார் குவளையும் காயாவும் போன்றிருண்ட
மெய்யானை மெய்யமலையானைச் சங்கேந்தும்
கையானைக் கைதொழாக்கையல்ல கண்டாமே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மைஆர்	மைபோலே கறுத்திருந்துள்ள	மெய்யானை	திருமேனியை யுடையனாய்,
கடலும்	கடலையும்	மெய்யமலையானை	திருமெய்யமலையிலே ஸந்நிஹிதனாய்,
மணி	நீலமணிமயமான	சங்கு	ஸ்ரீ பாஞ்சஜந்யத்தை
வரையும்	மலையையும்	ஏந்தும்	தரித்திராநின்ற
மாமுகிலும்	காளமேகத்தையும்	கையானை	திருக்கையையுடையனான ஸர்வேஶ்வரனை
கொய்யார்	பறிக்கையிலே பொருந்தின	தொழா	தொழாத
குவளையும்	நீலோத்பலத்தையும்	கை	கைகளானவை
காயாவும்	காயாம்பூவையும்		
போன்று	ஒத்து		
இருண்ட	கறுத்திராநின்ற		கை அல்ல கண்டாம். (ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (மையார்கடலுமித்யாதி) ஒன்றைச்சொல்லி, இன்னது உபமாநமென்னவொண்ணாத வடிவு சொல்லுமிடத்தில் உபமாநம் கொண்டிழியவேணும். அவைதான் இதுக்குப் போராவாயிருக்கும். காமிநிக்குக் காந்தனுடையதேஹமும் தேஹகுணமுமேயாய் வாய்வெருவுமாபோலே, ஆழ்வார்களெல்லார்க்கும் † படி. (மையார்கடலும்)பரிச்சேதிக்கவொண்ணாதிருக்கை. (மணிவரையும்) நெஞ்சாலே முகக்கலாயிருக்கை. (மாமுகிலும்) குளிர்ந்து ஶ்ரமஹரமாயிருக்கை.

(கொய்யார் குவளையும்) தர்ஶநீயமாயிருக்கை. (காயாவும்) நெய்த்திருக்கை. (மெய்யானை) இப்படிப்பட்டவடிவு. (மெய்ய

அரு;—அஞ்சாம்பாட்டு. (மையாரித்யாதி) "பல உபமாநங்களைச் சொல்லுவானென்? உபமேயத்தைமாத்ரம் சொல்லலாகாதோ? உபமாநத்துக்கு விசேஷங்களிடுவானென்?" இப்படி வருந்தியாகிலும் திருமேனியைச் சொல்லுவானென்?" என்கிற சங்காசதுஷ்டயத்தையும் அடைவே பரிஹரிக்கிறார் (ஒன்றையித்யாதி). இப்போது கடலை "மையார்" என்றது- நிஸ்தரங்க ஜலதி யென்றுதோற்றவேண்டி. தரங்கிதப்ரதேசம் வெளுத்திறே தோற்றுவது; ஆழமேசொல்லவேண்டி விசேஷித்தாரென்று கருத்து.

"கொய்கையிலே-பறிக்கையிலே பொருந்தினகுவளை" என்று சப்தார்த்தமாய்த் தாத்பர்யம் (தர்ஶநீயேத்யாதி). (ரு)

† (பா) பணி.

http://acharya.org

மலையானை) அறுகாதப் பயணம்போய் பரமபதத்திலே காணவி ராதே ஸந்நிஹிதனானவனை. (சங்கேந்தும் கையானை) தொழுகை க்கு இவன் கைபோலே தொழுவித்துக் கொள்ளுகைக்கு அவன்கை. (க)" 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌮 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 - தமஸ: பரம இத்யாதி ". (கை தொழாக் கையல்ல) தொழாக்கை கையல்ல என்றந்வயம். .... (ரு)

மூ;—கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும்
முள்ளார்முளரியு மாம்பலும் முன்கண்டக்கால்
புள்ளாயோரேனமாய்ப் புக்கிடந்தான் பொன்னடிக்கென்று
உள்ளாதாருள்ளத்தை யுள்ளமாக்கொள்ளோமே. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கள் ஆர்	மதுஸ்யந்தியான்	புக்கு	பூமியைஉள்ளேபுகுந்து
துழாயும்	திருத்துழாயையும்	இடந்தான்	இடந்தருளின ஸர்வே ஶ்வரனுடைய
கணவலரும்	அலரியையும்	பொன்	ஸ்ப்ருஹணீயமான
கூவிளையும்	பில்வபத்ரத்தையும்	அடிக்குஎன்று	திருவடிகளிலே (ஸமர் பிக்க உரியவை) என்று
முள் ஆர்	கண்டகப்ரசுரமான	உள்ளாதார்	நினையாதவர்களுடைய
முளரியும்	தாமரைமலரையும்	உள்ளத்தை	நெஞ்சை
ஆம்பலும்	ஆம்பல்புஷ்பத்தையும்	உள்ளமா	நெஞ்சாக
முன்	கண்ணுக்கெதிரில்	கொள்ளோம்	கொள்ளமாட்டோம். (சு)
கண்டக்கா	ல்பார்த்தால்(இவைகள்)		
புள் ஆய்	ஹம்ஸாவதாரம் செய் தருளினவனாய்,		
ஓர் ஏனம் ஆய்	வராஹாவதாரம் செய் தருளி		

வ்யா;—ஆறும்பாட்டு. (கள்ளார் துழாயும்) செவ்வித் திருத் துழாயும். (கணவலரும்) அலரியும். (கூவிளையும் முள்ளார் முள ரியும்) தாமரையும். (ஆம்பலுமுன் கண்டக்கால்) தேடிப்பறிக்க

அரு—ஆறும்பாட்டு. (கள்ளாரித்யாதி) கீழ்ச்சொன்ன ஜ்ஞாநேந்த்ரியங் களுக்கும் கர்மேந்த்ரியங்களுக்கும் நிர்வாஹகமான மநஸ்ஸு - பகவத்விஷயத் துக்கு உறுப்பாகாவிடில், அது மநஸ்ஸன்றென்று நிந்திக்கிறார் மேலிரண்டு பாட்டாலென்று ஸங்கதி.

"கூவிளையும்"-பில்வமும்,"முள்ளார்முளரியும்"என்றது-கண்டகிதமான நாளங்களையுடைத்தான தாமரையும்."முன்கண்டக்கால்"என்றதுக்கு வ்யாவர் த்த்யமருளுகிறார்(தேடியித்யாதி).திருத்துழாயோடொக்கமற்றவற்றையும்ஒக்க

(க) ரா-யு-ககச-கரு.

http://acharya.org

வேண்டா. விஸஜாதியங்களைக்கூட வெண்ணிற்றென்னென்னில்; இவனது த்ரவ்யப்ராதாந்யமன்று; ஸ்நேஹப்ராதாந்யம். ஸ்நேஹமில்லாதவன்இடில் திருத்துழாயுமாகாது. ஸ்நேஹத்தோடேஇடில் அலரியும் ஆம். ப்ராக்ருதமன்றே அப்ராக்ருதவஸ்துவுக்கு ஸத்ருஸம். ஸ்ரீபுருஷோத்தம முடையான் செண்பகம் உகந்து சாத்துவர்; சில ராஜபுத்ரர்கள் செண்பகங்கொண்டு சாத்தத்தேடி முன்பு பூவெல்லாம் வித்துப்போய் ஒரு பூவிருந்தது கடையிலே. இப்பூவுக்குச் செருக்காலே ஒருவர்க்கொருவர் த்ரவ்யத்தைப் போர ஏற்றி, இவர்களிலே ஒருவன் நினைக்க வொண்ணாதபடி த்ரவ்யத்தைப் போரவிட்டுக் கொடுவந்துசாத்தினான். அன்றிரா அவன் ஸ்வப்நம் காண்கிறான். "நீ இட்டபூ எனக்குக் கனத்துச் சுமக்க வொண்கிறதில்லை" என்றருளிச்செய்தான்.

(புள்ளாயோரேனமாய் புக்கிடந்தான் பொன்னடிக்கு) ஏதேனும் த்ரவ்யமாம்படி தன்னை ஏதேனும் த்ரவ்யமாகச் சிறுகியிட்டவன். பக்ஷிகளுக்கும் ம்ருகங்களுக்கும் ஆகாது இல்லையிறே. இவனிடுகிறவை மிகையாம்படியிறே சிறுகவிட்டபடி. (உள்ளாதாருள்ளத்தை) நினைவே அமையும். செயல்மிகை. (உள்ளமாக்கொள்ளோமே)வேறேயும் நினைப்பனவுண்டிறே அவர்கள்; தான் நினைக்குமவையொழிய, நினைக்குமவை ஹ்ருதயமன்றென்கிறார். ரத்நபரீக்ஷகன் கையிலேபுகுந்து இவன் விலையிட்டாலிறே விலைபெறுவது;அவ்வளவும் முடிகொண்டு திரியுமத்தனை. .... (சா)

வெடுக்கவொண்ணுமேவென்றுசங்கித்துப்பரிஹரிக்கிறார்(விஜாதீயங்களையித்யாதி).(அன்று)என்றவநந்தரம்"பார்ப்பது"என்றுசேஷம். (விவரணம்ஸ்நேஹமித்யாதி). த்ரவ்யஸ்வரூபமும்விசாரிக்கவேண்டாவோ?ஸ்நேஹமேபோருமோவென்னவருளுகிறார்(ப்ராக்ருதேத்யாதி). ஸ்நேஹபூர்வமாகப் பூவிட்டால்,அது அவனுக்கு அத்யந்தம் அலப்யலாபமாயிருக்குமென்றதுக்கு ஸம்வாதமருளுகிறார் (ஸ்ரீ புருஷோத்தமமுடையானித்யாதி).

இவர் "ஹ்ருதயமன்று" என்றால், அது ஹ்ருதயமாகாமல் போமோ வென்னவருளுகிறார் (ரத்நேத்யாதி). (சூ)

http://acharya.org

மூ.—கனையார்கடலும் கருவிளையும் காயாவும்
அனையானை யன்பினாலார்வத்தா லென்றும்
சுனையார்மலரிட்டுத் தொண்டராய்நின்று
நினையாதார்நெஞ்சென்றும் நெஞ்சல்லகண்டாமே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கனை ஆர்	மிக்க ஒலியையுடைய	மலர்	மலர்களை(கொணர்ந்து அவன்திருவடிகளிலே)
கடலும்	கடலையும்		
கருவிளையும்	கருவிளைப்பூவையும்	இட்டு	ஸமர்ப்பித்து
காயாவும்	காயாம்பூவையும்	தொண்டராய் நின்று	சேஷபூதர்களாய் நின்று
அனையானை	ஒத்திராநின்ற ஸர்வேஶ்வரனை,	என்றும்	எந்நாளும்
அன்பினால்	ஸ்நேஹத்தோடும்	நினையாதார்	த்யா (ஞா)னிக்கப் பெறுதவர்களுடைய
ஆர்வத்தால்	ஆற்றாமையோடும்		
சுனை ஆர்	தடாகங்களில் நிறைந்திராநின்ற	நெஞ்சென்றும்நெஞ்சல்ல கண்டாம் (எ)	

வ்யா.—எழாம்பாட்டு. (கனையார் கடலித்யாதி) உபமாநமில்லையென்று பேசாதிருக்க மாட்டாரே. திவ்ய விக்ரஹத்துக்கு உபமாநம் அபூமியானால் ஆத்மகுணங்களுக்கு உள்ளுப்போகாரிறே. (அன்பினாலார்வத்தால்) அன்பாவது - ஸ்நேஹம். ஆர்வமாவது-பெறுதொழியில் முடியும்படியான ஆற்றாமை. (சுனையார்மலரிட்டு) புஷ்பாத்யுபகரணங்கள் பண்டேசமைத்திருந்தன. அவன் தன்னைத்தாழவிட்டுநின்றான். (தொண்டராய்) இனி"அவனுக்கிது சேஷம்" என்னுமித்தைஇசையுமித்தனை. (நினையாதார் நெஞ்சென்றும் நெஞ்சல்ல)நினைவுக்கு அநதிஷ்டாநமானநெஞ்சு-நெஞ்சல்ல. (எ)

மூ.—வெறியார்கருங்கூந்த லாய்ச்சியர்வைத்த
உறியார்நறுவெண்ணெய் தானுகந்துண்ட
சிறியானைச் செங்கணெடியானைச் சிந்தித்து
அறியாதாரென்று மறியாதார் கண்டாமே. (அ)

அரு;—எழாம்பாட்டு. (கனையாரித்யாதி) விக்ரஹத்துக்கு ஒருபமாநம் அமையாதோ, இத்தனையிட்டு வர்ணிப்பானென்னென்ன வருளுகிறார் (உபமாநமித்யாதி). ஆத்மகுணங்களைப் பேசி அநுபவிக்கப்போகாதோ வென்ன வருளுகிறார் (திவ்யவிக்ரஹத்துக்கித்யாதி). (குணங்களுக்கு) என்றவநந்தரம் "த்ருஷ்டாந்தமிட்டநுபவிக்கிறார்" என்று சேஷம். ... ... (எ)

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
வெறிஆர்	பரிமளப்ரசுரமாய்	சிறியானை	(எளிமைக்குறுப்பான) சிறுமையையுடையனாய்
கரு	கருமை பொருந்திய	செம்கண்	சிவந்த கண்களையுடையனான
கூந்தல்	கூந்தலையுடைய	நெடியானை	ஸர்வேஶ்வரனை
ஆய்ச்சியர்	இடைச்சிகளாலே	சிந்தித்து அறியாதார்	நெஞ்சாலும் நினைத்தறியாதவர்கள்
வைத்த	சேமித்துவைக்கப்பட்டதாய்	என்றும்	எப்போதும்
உறிஆர்	உறிகளிலே நிறைந்துள்ள	அறியாதார்	விஷயவைலக்ஷண்யமறியாதவர்கள்;
நறுவெண்ணெய்	மணம்மிக்க வெண்ணெயை [து		கண்டாமே. (அ)
தான்உகந்து	தான் திருவுள்ளமுகந்		
உண்ட	அமுதுசெய்த		

வ்யா—எட்டாம்பாட்டு. (வெறியார் கருங்கூந்தலாய்ச்சியர் வைத்த) இடைச்சிகள் வைத்த. (உறியார் நறுவெண்ணெய் தானுகந்துண்ட) ஆஶ்ரித த்ரவ்யமாகையாலே பெறுப்பேறு பெற்றுனாய் உண்டபடி. (சிறியானை) ஆஶ்ரயிக்குமவர்களுக்கு இனி இல்லை என்னும்படி, தாழவிட்டு முக்த்த(ஃ)னைவனை. (செங்கணெடியானை) இவர்களைக்கொண்டுபோய் வைக்குமிடத்தில் இதுக்குமேல் இல்லையென்னும்படி உயரப்பரமபதத்திலே வைக்கவல்லவனை. (சிறியானைச் செங்கணெடியானை) ஆஶ்ரிதர்க்கு இப்படி எளியனாய், மேன்மையால் குறையற்றுச் சிவந்த கண்களையுடைய ஸர்வேஶ்வரனை. (சிந்தித்தறியாதார்) நினைத்தறியாதவர்கள். (என்றுமறியாதார்) இங்குத்தை எளிமையும் மேன்மையும் இரண்டுமறியாதவர்கள். .... (அ)

அ௩;—எட்டாம்பாட்டு. (வெறியாரித்யாதி) பாஹ்யகரணங்களோடு ஆந்தரகரணங்களோடு வாசியற என்றும் பகவச்சேஷமாகாவிடில் அவை அஸத்கல்பமென்றார்கீழ். இனி மேலிரண்டு பாட்டாலே கரணிகளான மநுஷ்யர் நினையாவிடில் அஸத்கல்பரென்கிறுரென்று ஸங்கதி.

(இடைச்சிகள் வைத்த) என்றது, அதிகாரிகளுடைய தாழ்மையும் பாரானென்றுதோற்றுகைக்காகக்கீழ் தாத்பர்யமருளிச் செய்து வாக்யார்த்தமருளுகிறார் (ஆஶ்ரிதர்க்கித்யாதி). ... ... (அ)

http://acharya.org

மூ.—தேனோடு வண்டாலும் திருமாலிருஞ்சோலை
தானிடமாக்கொண்டான் தடமலர்க்கண்ணிக்காய்
ஆன்விடையேழன்றடர்த்தாற் காளானாரல்லாதார்
மானிடவரல்லரென் றென்மனத்தே வைத்தேனே. (௯)

பதம்.	உரை.
தேனோடு	வாயில் தேனோடே
வண்டு	வண்டுகளானவை
ஆலும்	ஆரவாரம் செய்யாநின்றுள்ள
திருமாலிருஞ்சோலை	திருமாலிருஞ்சோலையை
தான் இடமா	தனக்கிருப்பிடமாக
கொண்டான்	அமைத்துக்கொண்டருளினவனாய்,
அன்று	சுல்கப்ரஸங்கத்திலே
தட	விசாலமாய்
மலர்	கருநெய்தல் பூப்போன்ற
கண்ணிக்காய்	கண்களையுடையளான நப்பின்னைப்பிராட்டிக்காக
ஆன்விடைஏழ்	மதித்த எழுவ்ருஷபங்களை
அடர்த்தாற்கு	நிரஸித்தருளின ஸர்வேஶ்வரனுக்கு
ஆளானாரல்லா தார்	ஆட்படாதவர்கள்
மானிடவர் அல்லர் என்று	மநுஷ்யகோடியில் சேராதவர்களென்று
	(இவ்வர்த்தத்தை)
என்மனத்தே	என் ஹ்ருதயத்தில்
வைத்தேன்	உறுதியாகநாட்டினேன். (௯)

வ்யா;—ஒன்பதாம்பாட்டு. (தேனோடுவண்டாலும் திருமாலிருஞ்சோலை தானிடமாக் கொண்டான்) உண்கிறவாயில், தேனுள்ளே இழிச்சுவது, உமிழ்வதாகாநின்றுகொண்டு ஸஸம்ப்ரமந்ருத்தம்பண்ணும் வண்டுகள். மதுவும் நித்யமாய்ச் செல்லுகிறபடி. (தடமலர்க்கண்ணிக்காய்) சுனைப்பூப்போலேயிருந்த திருக்கண்கள்.

(ஆன்விடையேழன் றடர்த்தாற்கு) தன்னைப்பேணாதே எருதுகளை அடர்த்தவனுக்கு. (ஆளானாரல்லாதார்) அவன்றன்னைப் பேணுதொழியத் தங்களைப் பேணித் திரியுமவர்களை. (மானிடவரல்லர்) பிரித்து அவயவங்களைச் சொல்லுகிறதென்? கட்டடங்க மநுஷ்யரல்லர். (என்மனத்தே வைத்தேனே) ஸர்வேஶ்வரன் குற்றங்

அரு;—ஒன்பதாம்பாட்டு. (தேனித்யாதி) இவர் மனத்திலே வைத்தால் விரோதமென்னென்ன வருளுகிறார் (ஸர்வேஶ்வரனித்யாதி). ஸ்வவிஷயத்தில்குற்றங்களைப்பொறுக்குமென்றபடி. (௧) "[illegible]

---

(௧) வாத-ஸ்த-௯௰.

http://acharya.org

களும் பொறுக்குமிறே. அவன் கழித்தவன்றும் க்ருபைபண்ணு மவரிறே ஆழ்வார். இருவருமகப்படக் கைவிடும்படி யானார்கள். (க) "మిత్రమౌపయికం కర్తుం - மித்ரமௌபயிகம் கர்த்தும்" என்னு மவளிலும், இவர்க்குவாசியுண்டு. .... (௯).

மூ.—மெய்ந்நின்ற பாவமகலத் திருமாலைக்
கைந்நின்ற வாழியான்சூழும் கழல் சூடி
கைந்நின்ற வேற்கைக்கலிய னொலிமாலை
ஐயொன்றுமைந்து மிவைபாடி யாடுமினே. (கய)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மெய்ந்நின்ற	ப்ரக்ருதியிலே அநுபவிக்கக்கடவதாய் நின்ற	கைநின்ற	கைகழலாதே நின்ற
பாவம்	பாபங்களுடைய	ஆழியான்	திருவாழியாழ்வானை நிரூபகமாக உடையனான ஸர்வேஶ்வரனுடைய
அகல	கழிவதற்காக,		
திருமாலை	ஶ்ரிய:பதியாய்,		

త్వయాసర్వజ్ఞ సర్వజ్ఞ శీఘ్రమాజ్ఞాప్య। వరద శ్రీవరదుశ్చ్యవనదృశ్యః-யதபராதஸஹஸ்ரமஜஸ்ரஜம்த்வயிசரண்ய ஹிரண்ய உபாவஹத்। வரததேநசிரம் த்வமவிக்ரிய:" என்னக்கடவதிறே. (அவன் கழித்தவன்றும்) என்றது- "విక్రియత్సమర్థకనిర్భజనాదరః- விக்ருதிமர்பகநிர்பஜநாதகா:" என்கிறபடியே பாகவதாபசாரம் பொறுக்கமாட்டான் ஸர்வேஶ்வரன்; அவன் கழித்தவன்று மென்றபடி.

(க்ருபை பண்ணுமவரிறே ஆழ்வார்) என்றது. (உ)"பயிலும்சுடரொளி"(௩) "நெடுமாற்கடிமை" (௪)"நண்ணுதவாளவுணர்" (௫)"கண்சோரவெங்குருதி" முதலானவற்றிலே பாகவத வைபவத்தை விஸ்தரேணவருளிச்செய்கையாலே பாகவதாபசாரம் புகுர வழியில்லாதபடி உபதேசிக்கை. இப்படிப்பட்ட ஆழ்வாருடைய உபதேசத்துக்கும் விஷயமாகாதே போனார்க்கு இனிஉஜ்ஜீவந ப்ரஸங்கந்தானுண்டோவென்னுமத்தைக்காட்டுகிறார் (இவருமித்யாதி). "மனத்தே வைத்தேனே" என்ற உத்தமனுலே தம்மதென்று தோற்றுமே என்பா னென்னென்ன வருளுகிறார் மித்ரமௌபயிகமித்யாதி). பிராட்டி உபதேசம் கேளாதவனுக்குத் தலையோடே போயிற்று; ஆழ்வாருபதேசத்துக்கு உட்படாதார்க்கு ஸ்வரூபம நேசிக்குமென்று கருத்து. ... ... (௯)

(க)ரா-ஸு-உக-கூ (உ) தி-வாய் ௩-எ. (௩) தி-வாய்-அ-கய.
(௪) தி-மொ-உ-கூ. (௫) தி-மொ-எ-௪.

http://acharya.org

சூழும்	எல்லாரையும் சூழ்த்துக்கொள்ளவல்ல	கலியன்	ஆழ்வார்
கழல்	திருவடிகளை	ஒலி	அருளிச்செய்த
சூடி	(சிரோபூஷணமாக) சூடுமவராய்	மாலே	சொல்மாலையான
கைநின்ற	கைசெய்வதற்கு (ஸஹகாரிக்கைக்கு) உறுப்பாயிராநின்ற	ஐஒன்றும் ஐந்தும் இவை	இப்பத்துப்பாட்டுக்களையும்
வேல்	வேலே [யரான	பாடி	வாயாரப்பாடி
கை	திருக்கையிலே உடை	ஆடுமின்	ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணுங்கோள்.

(க௦)

வ்யா—பத்தாம்பாட்டு. (மெய்ந்நின்றபாவமகல) ப்ரக்ருதியிலே அநுபவிக்கக்கடவதாய்நின்றபாபங்கள் அகல. பாபத்துக்கடி ப்ரக்ருதியிறே. (திருமாலே) அவள் முன்னாக ஆஶ்ரயிக்கிலிறே பாபங்கள் அகலுவது. (கைநின்றவாழியான்) * எப்போதும் கைகழலா நேமியானயிறே இருப்பது. (சூழுங்கழல்) எல்லாரையுமாக்கிக்கொள்ளும் திருவடிகள். திருவடிகளுக்கு ஆகாதாரில்லே. இத்திருவடிகளைச் சூடும் ஆழ்வார். (கைநின்ற வேற்கைக்கலியன்) சேஷித்வத்துக்கு அவன் திருவாழியைப் பிடித்தாப்போலே சேஷத்வத்துக்கு இவர் வேலைப்பிடித்தபிடி. (ஒலிமாலே ஐயொன்றுமைந்தும்) பத்தும். (இவைபாடியாடுமினே) முன்பே டாசுர

அரு;—பத்தாம்பாட்டு. (மெய்ந்நின்றவித்யாதி) "மானிடவரல்ல ரென்றென்மனத்தே வைத்தேனே" என்றவர்தாமே பின்னும் ஆசையாலே அதிலே அந்வயித்தால், இப் ப்ரபந்தம் நழுவ விடாதே அநுகூலிக்கப் பண்ணுமென்று ஒருவழியருளிச் செய்கிறரென்றவதாரிகை.

பாபத்தை "மெய்ந்நின்ற" என்பானென்னவருளுகிறர்(பாபத்துக்கித்யாதி),

(ஆக்கிக்கொள்ளும்) அடிமையாக்கிக்கொள்ளும். "ஐயொன்றுமைந்தும்" என்றல் பதினென்றுதோற்றுதபடி யருளுகிறர் (பத்தும்)என்று. பாஹ்யகரணங்களை நிந்தித்தவைந்தும், ஆத்மாக்களை நிந்தித்து விடமாட்டாதே ப்ரபந்தத்தை அநுஸந்திக்கச் சொல்லுகிறதுமான தோரைந்துமாகப் பத்துமருளிச் செய்தாரென்று திருவுள்ளம். ஆத்ம சப்தம், மநஸ்ஸுக்கும் ஜீவனுக்கும் பெயர். (க௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org

மிட்டுத் தந்தோம். இனிச் சரீரத்தாலுள்ள விநியோகம் கொள்ளுங்கோள். .... (க௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
பதினோராம்பத்து ஏழாந்திருமொழி முற்றிற்று,

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

பதினோராம்பத்து எட்டாந்திருமொழி
மாற்றமுளவின் ப்ரவேசம்.

வ்யா;—அடியிலே வாதிப்ரதிவாதிகளாயாயிற்று இழிகிறது. இவர்தாம் ஒருவார்த்தை சொன்னுவிறே அவனுக்கு மறுமாற்றமுள்ளது. இவர்சொன்னவார்த்தை ஏதென்றால்;-இவ்வாத்மவஸ்துவானது அங்குத்தைக்கு ஸ்ரீகௌஸ்துபத்தோபாதியும் நாய்ச்சிமார்திருமுலைத் தடத்தோபாதியும் ஸ்ப்ருஹாவிஷயமுமாய்போக்ய

அரு;—மாற்றமுளவின் ப்ரவேசம். இவ்வாழ்வார் அடியிலே "சூழ்புனல் குடந்தையேதொழுமின்" என்று தொடங்கினத்தை "தண்குடந்தை நகர்பாடியாடீர்களே" என்று உபதேசித்திருக்கச் செய்தேயும் விஷய ப்ரவணராய்ப் போருகையாலே, அவர்கள் கரணங்களையும் அவர்களையும் நிந்தித்து இசையாதே அஸேவ்ய ஸேவைபண்ணியிருந்தவர், மீளவும் இந்த சாற்றுப்பாட்டிலே பலம் சொல்லித் தலைக்கட்டுகையை விட்டும் "இவை பாடி யாடுமின்" என்று பரோபதேசம் செய்ய வழியில்லை என்னும் சங்கையைப் பரிஹரிக்கிறுரென்று திருவுள்ளம்பற்றி, ஆழ்வாருடைய திருவுள்ளத்திலோடுகிற நிரூபண விசேஷத்தை உபபாதிக்கிறுர் (மாற்றமுளவித்யாதி). தம்முடைய உபதேசமும் கார்யகரமாகாதபடி அநாதரித்தான் ஈஶ்வரனுகையாலே இவர்களை நிந்திக்க வழியில்லை என்று கருதி, அவன் ஆதரித்திருக்கைக்குத் தம்முடைய ப்ரபந்தத்திலே அந்வயியுங்கோள், அத்தாலேஸகலப்ரதிபந்தகங்களும்போய் ஆநந்தமே பலிக்கும் என்று, மீளவும் பரமக்ருபையாலே உபதேசிக்கை கூடுமென்று கருத்து.

ஸர்வேஶ்வரன் மேலேதானே குற்றம்சுமற்றும்படி யென்னென்ன, அதுக்குக் கருத்தருளுகிறுர் (அடியிலேயித்யாதி). "ஆகிலும் சொல்லுவன்"என்கையாலே (வாதிப்ரதிவாதிகள்) என்றது. "மாற்றம்" என்றத்தாலே பூர்வப்ரஶ்நம் வேண்டுகையாலே (அருளுகிறுர்இவர்தாமித்யாதி). "பூணுரமார்வனை" என்றத்தையும், "தடமலர்க்கண்ணிக்காய்" என்றத்தையும் திருவுள்ளம்பற்றி

http://acharya.org

மூமாயிருந்தது-அநாதிகாலம்இழந்து அநுபவிக்கவேண்டுவானென்? என்று கேட்டால்,சொல்லலாவன சிலவார்த்தையுள.அவ்வார்த்தை தானென்னென்றால்;—(க) [அங்கைத்தலத்திடையித்யாதி] என்று மொக்க ஈஶ்வரன் முகத்தில் விழியேனென்று ப்ரதிஜ்ஞையைப் பண்ணி நம்பக்கலிலே விமுகனாய் சப்தாதிகளிலே ப்ரவணனாய், நம் பக்கல் அத்வேஷமுமின்றிக்கே போருகையாலே ஸம்ஸரித்துப் போந்தான்; இதொருவார்த்தை.

(உ) [అనిత్యమసుఖం లోకమ్ - அநித்யமஸுகம் லோகம் இத்யாதி]ஸம்ஸாரபயபீதனாய்க்கொண்டு நம்பக்கல் புகுராதே நம்பக்கல் நிரபேக்ஷனாய் கர்மஸாபேக்ஷையைப்பண்ணிப் போந்தவநாதிகால வாஸிதமான புண்யபாபரூபமான கர்மபரம்பரையானது ஜந்மபரம்பரைகளிலே மூட்ட, அவ்வழிகளாலே ஸம்ஸரித்துப் போந்தான்.

இனி(ந)"కర్తా కారయితా-கர்தாகாரயிதா"என்றும்,(ச)"కర్తా శాస్త్రార్థవత్త్వాత్ - கர்த்தாஶாஸ்த்ரார்த்தவத்வாத்" என்றும், (ரு) "శాస్త్రఫలం ప్రయోక్తరి- ஶாஸ்த்ரபலம்ப்ரயோக்தரி" என்றும் சொல்லுகிறபடியே,கர்த்த்ருத்வ போக்த்ருத்வங்கள் சேதந்ய க்ருத்யமாயாயிற்றிருப்பது. அதில்லாமையாலே ஸம்ஸரித்துப்போந்தான் என்றுபோலே சொல்லலாம். இவை உனக்கு வார்த்தையல்ல,

ப்ரஶ்நம்உதித்ததென்றுகொள்வது."மாற்றம்" என்றது ஜாத்யேகவசநமாக்கியருளுகிறார்(சொல்லலாவனவித்யாதி). (இத்யாதி) என்றவநந்தரம் "அப்படியின்றிக்கே" என்றுசேஷம். அதாவது-(க) "சிறுமானிடவரைக் காணில் நாணும் கொங்கைத்தலமிவை நோக்கிக்காணீர் கோவிந்தனுக்கல்லால் வாயில் போகா" என்றிருக்கையன்றிக்கே யென்கை.

மூன்றும்வார்த்தை (இனியித்யாதி) "కర్తా కారయితా చైవ ప్రేరకశ్చానుమోదకః - చత్వారస్సమభాగినః - கர்தாகாரயிதாசைவ ப்ரேரகஶ்சாநுமோதகஃ- சத்வாரஸ்ஸமபாகிநஃ" என்று வசநசேஷம். (போந்தான்) என்றதுக்கு என்னிடத்திலே பாரத்தைப்பொகட்டுப் பரதந்த்ரனாய், என்னைபார்த்திராமையாலே ஸம்ஸரித்துப் போந்தானென்னும் நாலாம்வார்த்தையை ஸூசிப்பிக்கையிலே நோக்கு. இங்ஙனன்றாகில், நாலாம்வார்த்தையாகச் சொன்ன (பாரதந்த்ர்யத்தைப்பற்றி)இத்யாதி கூடாதிறே.

(க) நா-தி-கஉ-ச. (உ) கீ-கூ-நந. (ந)
(ச) ப்ருஹ்மஸூ-உ-ந-நந. (ரு) பூர்வமீமா-ந-எ கஅ.

"ஆகிலும் சொல்லுவன்" இதுபக்ஷ (ధ్వ)மாம்படி இவற்றுக்கு மேலே உத்தரம்சொல்லுவன். எங்ஙனேயென்னில்; ருசியில்லையென்றேமுதல்வார்த்தை, ருச்யருசிகளுக்கும் அடியேதென்னில், மநஸ்ஸாயே இருப்பது. அந்தமநஸ்ஸை நீ இட்டவழக்கன்றோ? (க) "సర్వస్య చాహం హృది సన్నివిష్టః- ஸர்வஸ்யசாஹம் ஹ்ருதிஸந்நிவிஷ்ட:" (உ)"தீமனம்கெடுத்தாய்," (ங)"மருவித்தொழும்மனமே தந்தாய்" என்றுசொல்லுகிறபடியாலே ருசிஜநகன் நீயானபின்பு, ருசியில்லை என்று சொன்னவிடம் வார்த்தையல்ல.

அநந்தரம் கர்மமடியாக ஸம்ஸரித்துப்போந்தான் என்றுமீத? கர்மஸ்வரூபத்தைப் பார்த்தால், அதுக்ரியாரூபமாகையாலே அப்போதே நசிக்குமே. க்ரிபாவான்மறக்குமே; அது-நிக்ரஹாநுக்ரஹரூபேண உன் திருவுள்ளத்தில் கிடந்தன்றோ அநுபாவ்யமாவது. உனக்கு நிவாரகரில்லாமையாலே அத்தை க்ஷமிக்கத்தீருமே. ஆகையாலே அதுவும் வார்த்தையல்ல. இனி கர்மகர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் சைதந்யக்ருத்யம்; அதில்லாமையாலே ஸம்ஸரித்துப்போந்தானென்னதுவும் வார்த்தையல்ல; உனக்கிது ஶரீரதயாபாரதந்த்ரமாகையாலே, ஸ்வதந்த்ரக்ருத்யமான கர்த்ருத்வம் பரதந்த்ரனுக்குக் கூடாமையாலே, அதுவும் வார்த்தையல்ல; ஶரீரக்ஷணம் ஶரீரியன்றோபண்ணுவான். ஸம்பந்தத்தையும் மறந்தாயோவென்கிறார். ஆனபின்பு உன்னுடைய அநாதரமேஹேது.

இருவரும் என்நினைத்துச்சொன்னார்களென்னில்; அவன் கர்மத்தைப்பற்றி நின்று வார்த்தை சொன்னான்; இவர் ப்ருஹ்மத்

இந்தநாலாம் வார்த்தைக்குஉத்தரமருளுகிறார் (சரீரரக்ஷணமித்யாதி).

"ஸர்வஜ்ஞனான ஸர்வேஶ்வரனும், அவனாலே * மயர்வறமதிநலமருளப்பெற்றவாழ்வாரும், வாதிப்ரதிவாதிகளாம்போது ப்ரமாணங்களை நிஶ்சயித்திறே நிரூபிக்கவடுப்பது" என்னும்ப்ரஶ்நத்தைக் கிளப்பி, வேதத்தில் பூர்வோத்தர பாகங்களைப்பற்றி முதல்வார்த்தையும், உத்தரபாகம் தத்ஸாரமான திருமந்த்ரத்தைப்பற்றி இரண்டாம்வார்த்தையும்,திருமந்த்ரம் தன்னில் மத்யமபதத்தைப்பற்ற மூன்றும் வார்த்தையும் நமஸ்ஸு தன்னிலும் ஆர்த்தமான பகவதேகோபாயத்வத்தையும் அசித்வத்பாரதந்த்ர்யத்தைப்பற்ற நாலாம்வார்த்தையுமாக ப்ரமாண விசேஷங்களை ஸூசிப்பிக்கிறார்(இருவருமித்யாதியாலே).இப்படி

(க) கீ-கரு-கரு. (உ) தி-வாய்-உ-எ-அ. (ங) தி-வாய்-உ-எ-எ

http://acharya.org

தைப்பற்றி நின்று அத்தை அழித்தார். அவன் வேதத்தைப் பற்றி நின்று வார்த்தை சொன்னான்; இவர் வேதாந்த தாத்பர்யத்தைப்பற்றி அழித்தார். அவன் ஸ்வரூபத்தைப்பற்றி வார்த்தை சொன்னான்; இவர் ஸ்வரூபயாதாத்ம்யத்தைப்பற்றி நின்றழித்தார். அவன் பாரதந்த்ர்யத்தைப்பற்றி நின்று, ஸாத்யோபாயத்தைப்பற்றி வார்த்தை சொன்னான்; இவர் பாரதந்த்ர்ய காஷ்டையைப்பற்றி நின்று ஸித்தோபாயத்தைப்பற்றி வார்த்தையை அழிக்கிறார். இதுகாணும் உபாஸகரில் காட்டில் ப்ரபந்நனுக்கு ஏற்றம். *மக்கள் தோற்றக்குழிதொடங்கிமேற்பாட்டுக்குறையும் இவற்றைச் சொன்னபடி.

(மெய்ந்நின்றவித்யாதி) போக்யதை அளவிறந்திருந்தது; அநுபவித்து வாழுங்கோள் நாடடைய வென்கிறார். [மெய்ந்நின்றபாவமாகல] அநுபவித்தல்லது நசியாதபடியான பாபமானது போகவென்னுதல்; தேஹோபாதிகமானது அகலவென்னுதல். [திருமாலை] விரோதியென்று பேர்பெற்றவற்றையடையப் போக்குவிக்கும் பிராட்டியை அருகேயுடையவனை. (கைநின்ற) * எப்போதும் கை கழலாநேமியானாயிருக்கிற ஸர்வேஶ்வரனுடைய போக்யதை அளவிறந்திருந்துள்ள திருவடிகளையென்னுதல். ஸுலபமான திருவடிகளை சிரஸாவஹித்தென்னுதல். ஸர்வேஶ்வரன் ஐஶ்வர்யப்ரகாசகமானதிருவாழியைக் கையிலே யுடையவனைப்போலேசேஷத்வப்ரகாசகமான வேலையுடைய ஆழ்வாரருளிச்செய்த இப்பத்தையும் பாடு

நிரூபித்தவர்த்தத்திலேபோடு (இதுகாணுமித்யாதி). இத்தனை உத்தரங்களுக்கு ஸூசகமெங்கேயென்ன வருளுகிறார்(மக்களித்யாதி). "நாற்றச்சுவையூறொலியாகிய" என்று சப்தாதிவிஷயங்கள் நீ இட்டவழக்கென்று இவர் உத்தரம் சொல்லுகையாலே, ஸூசிதமென்றுகருத்து. இப்படிநிரூபித்திருந்தவராகையாலே ஸம்ஸாரிகளை நிந்திப்பானென் னென்ன;என்றுவிட்டு, மீளவும உபதேசித்தாரென்று திருவுள்ளம்.

ஆழ்வார் தம்முடைய பரமக்ருபையாலே ஸம்ஸாரிகளைக்குறித்து உபதேசித்தது இப்பாட்டேயாய், மேலே மாற்றமுளவென்று தொடங்கி மேல் ப்ரபந்தங்களிலும் பரோபதேசமில்லாமையாலே இப்பாட்டில் ஆதரம் தோற்றுமளவும் வ்யாக்யானம் செய்தருளுகிறார் (கைநின்றவித்யாதி). பாட்டுக்

வது ஆடுவதாங்கோள். விரோதிபோக்குகையில் பணியில்லை. அது தன்னடையேபோம். மேலுள்ளது உங்களுக்குஹர்ஷமே.

பகவத்விஷயத்தில் அந்வயியாதாருடைய கரணங்கள், அவர்கள் அவற்றைத் தங்களுக்கு உறுப்பென்று நினைத்தார்களேயாகிலும், அவை அவர்களுக்கு அடைத்தவையல்லவென்றும், பகவத்ப்ராவண்யமில்லாதார் முதலிலே சேதநரல்லரென்றும் சொன்னார் கீழில்திருமொழியில்; இவர்தாம் பிறர் குறையறிந்து பரிஹரிப்பாராய் நின்றார்; நாம் நின்றநிலை ஏதென்று ஆராய்வோம். இவர்தாம் தம்குறைகிடக்கப் பிறர்குறை பரிஹரிக்கப் பார்க்கிறது- தான் குறைவற்றாராக நினைத்திருந்தோ? அன்றிக்கே தம்முடையக்ருபாகுணப்ராசுர்யத்தாலேயோ? தயாவான்களாயிருப்பார் தந்தாம் குறைகிடக்கச்செய்தேயும், பிறர்குறையைப் பரிஹரிக்கப்பார்ப்பர்களிறே. பெருமாள் பிராட்டியைப்பிரிந்து தடுமாறிக்கண்ணுஞ்சுழலை

கெல்லாம் தொகுத்தபாவம் (விரோதியித்யாதி). இப்ப்ரபந்தாநுஸந்தாநமாத்ரத்தாலே பிராட்டியும்அவனும் உகந்து உங்களைக்கடாக்ஷித்தால் உங்களுக்குப் புருஷார்த்தம்ஸித்திக்குமென்றுபரமார்த்தத்தைஉபதேசித்தாரென்றுகருத்து

அடியிலே "குடந்தையேதொழுது" என்று ஆராவமுதைப் பருகினவராகையாலே, திருப்பிரிதிதொடங்கி உகந்தருளின நிலங்களில் ப்ரவணரானவர் * தூவிரியமலருழக்கியிலே தூதுவிட்டும், * ஏழையேதலனில் தாமேமுன்னிலையாகத்தமக்கு இவ்விபூதியிலிருப்பு அரிதாயருளவேணுமென்று சரணம்புக, அடியில் ஆராவமுதைப்பருகினவராகையாலே இவரை இன்னமும் உகந்தருளின நிலங்களை அநுபவிப்பிப்போமென்று ஸங்கல்பித்து அதிலே மூட்ட * ஒருநல்சுற்றத்தளவும் பரிபூர்ணமாக வநுபவித்து, அதுக்குமடியான ராமக்ருஷ்ணாத்யவதாரங்களையும்அநுபவித்து, தத(ஃ)லாபத்தாலேநொந்துமீண்டுதிருவாலியெம்பெருமானடிமேல் "போதணியப்பெற்றோம்"என்று தேறி, ஸம்ஸாரிகளிருக்கும்படியே ஆராவமுதைப் பருகச்சொல்ல, அது செய்யாமையாலே நிந்திக்கிற ஆழ்வாரைக்கண்ட ஸர்வேஶ்வரன், "இவ்வாழ்வாருக்கு இவ்விபூதியில் கால்பாவி ஏழையே தலனைத் தீர்ந்ததோ?" என்று விசாரிக்கத்தோலி, ஸம்ஸாரமண்டலத்தில் இவரிருப்பைஅறிவிப்பித்தானென்கிறாரென்று திருவுள்ளம்பற்றி, கீழ்த்திருமொழியோடேஇதுக்குஸங்கதியருளுகிறார் (பகவத்விஷயத்திலித்யாதி). (கரணங்கள்) என்றவநந்தரம் "யாவைசிலவுண்டு" என்று சேஷம்,

http://acharya.org

யிட்டு வாராநிற்கச்செய்தேயும் மஹாராஜரிழவைக்கண்டபின்பு அவற்றைமறந்து அத்தைப் பரிஹரிக்கப் பார்த்தாரிறே.

"இவைகிடக்க, இவர்தாம்நின்ற நிலையை இவர்க்கறிவிப்போம். ஸம்ஸாரத்தினுடைய பொல்லாங்கையறிவித்தால் இதுவே அமையுமென்றறிந்தாராகில் இங்கேவைக்கிறோம். இதில் பொருந்தாதபடியானாராகில் அமர்ந்தநிலத்திலேகொடுபோகிறோம்" என்றுபார்த்து, "பிறரை இகழ்கிறநீர்தான்நின்றநிலையைப்பார்த்துக்காணீர்" என்ன; தம்மைப்பார்த்தார். ஜ்ஞாநலாபமுண்டேயாகிலும் அவன்உபேக்ஷித்தவன்று இவ்வருகே போகைக்குமுடலாய்,அவன்ஆதரித்தபோது அவ்வருகே போகைக்குமுடலாம்படி பொதுவான நிலத்தில் தேஹஸம்ஸ்ருஷ்டராயிருக்கிற விருப்பைக்கண்டார். குறைவற்றாராயிருக்கிறவர்கள் கோடியிலேயுமாகப் பெற்றதில்லை; இக்குறை நெஞ்சில் படாதே போதுபோக்கியிருக்கிறவர்கள் கோடியிலேயுமாகப்பெற்றதில்லை.

இதுதான் தேஹமாயும் இந்த்ரியமாயும் போக்யமாயும் பந்தகமாய்த்தோற்றியிருந்தது. இதுதான் அஸத்கல்பமாம்படியிறே பிறந்தஜ்ஞாநம். அந்தஜ்ஞாநந்தான் ஆறியிருக்கைக்குஉடலன்றிக்கே, த்வரிக்கைக்கு உடலாயிருக்குமிறே. புற்றினருகே பழுதைகிடந்

(இதுவேஅமையுமென்றிருந்தாராகில்) என்றது-உகந்தருளின நிலத்தில் ப்ராவண்யத்தாலே,(க) "இங்கே திரிந்தேற்கிழுக்குற்றென்" இத்யாதிப்படியே தேறியிருந்தாராகிலென்கை. ஜ்ஞாநமுண்டானல் உம்முடலை-கைங்கர்யத்துக்குஉடலாக்கலாமே, இதுக்கஞ்சக்காரணமென்னென்னவருளுகிறர் (ஜ்ஞாநலாபமித்யாதி). பொதுவாகையாலே அச்சத்துக்கு முடலாமேயென்று திருவுள்ளம்.

"போதணியப்பெற்றோமே" என்றிருக்குமவருக்கு பந்தகமாகாதேயென்ன; ஆகிலும் இவ்வுடம்பொடுசெய்யும் கைங்கர்யம், அபி (ரி) நிஷ்பத்யமான ஜ்ஞாநத்துக்குப் போருமோவென்கிறர் (இதுதானித்யாதி). அந்தஜ்ஞாநந்தானே பயஹேதுவாயிற்றென்கிறர் (அந்தவித்யாதி). எத்தனை சொன்னாலும் அவருக்கு ஸகலகரணங்களும் பகவத்விஷய ப்ரவணமாய், பெறில் தரித்தல், இல்லையாகில் நசித்தலாயிருக்க, இவருக்கு அஞ்சுகைக்கு நிமித்தமுண்டோவென்ன, (புற்றினருகேயித்யாதி). ஆனால் பயமநுவர்திப்பானேன்,

(க) தி-வாய்-அ-க௦-ச

தாலும் "பாம்பு" என்றே பயம் அநுவர்த்திக்குமிறே. ஆகையால் இதுதான் அவஶ்யம்பரிஹரித்துக்கொள்ள வேண்டுவதொன்றாயிருக்கிறபடியும், தம்மால்பரிஹரித்துக்கொள்ள வொண்ணாதபடியாயிருக்கிறபடியும், அவனையே கால்கட்டிப் பரிஹரித்துக்கொள்ளவேண்டியிருக்கிறபடியையும்அநுஸந்தித்து, த்வதநுபவவிரோதியானதேஹஸம்பந்தத்தை அறுத்துத் தந்தருளவேணுமென்று திருவடிகளிலே விழுந்து சரணம் புகுகிறார். .... *

மூ.—மாற்றமுள வாகிலும் சொல்லுவன் மக்கள்
தோற்றக்குழி தோற்றுவிப்பாய்கொ லென்றின்னம்
ஆற்றங்கரை வாழ்மரம்போலஞ்சுகின்றேன்
நாற்றச்சுவை யூறொலியாகிய நம்பீ. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நாற்றம்	கந்தமென்ன	சொல்லுவன்	அதுக்குமேலே உத்தரம் சொல்லுகிறேன்;
சுவை	ரஸமென்ன	மக்கள்	மநுஷ்யர்களுடைய
ஊறு	ஸ்பர்சமென்ன	தோற்றக்குழி	கர்பஸ்தாநமாகிற பெரும்பாழியிலே
ஒலி	ஶப்தமென்ன	இன்னம்	இதுக்குமேலும்
ஆகிய	ஆகிய இக்குணங்களாய் நின்ற	தோற்றுவிப்பாய்கொல்	பிறப்பித்து ஸம்ஸரிக்கச்செய்வாயோ
நம்பீ!	பூர்ணனே!	என்று	வென்று நினைத்து
(நான் உன்னைச்சிலகேட்டால்;)		ஆற்றங்கரை	ஆற்றங்கரையிலே
மாற்றம்உள	உனக்குச்சொல்லலாம் மறுமாற்றமுண்டு;	வாழ்	வர்த்திக்கிற
ஆகிலும்	நான்சொன்னவற்றுக்கெல்லாம் நீ உத்தரம் சொன்னையேயாகிலும்	மரம்போல்	வ்ருக்ஷம்போலே
		அஞ்சுகின்றேன்	பயப்படாநின்றேன். (க)

வ்யா;—முதற்பாட்டு.(மாற்றமுள) "இவ்வாத்மவஸ்துவானது கௌஸ்துப ததிகளோபாதி நிர்தோஷமாய் உன்னாலே தரிக்கப்படுவ

(௧) "ஸமி ஸ்ரீஜீவ-நபிபேதிருதஸ்சந" என்றன்றோ ப்ரபந்நர் இருப்பது.

*வழையேதலனிலே சரணம் புகுந்தாரே,அதுதானே அமையாதோவென்னவருளுகிறார் (ஆகையாலித்யாதி). *

(க) தை-ஆ-கூ-க.

http://acharya.org

தொன்றுயிருக்க, இது அநாதிகாலம் ஸம்ஸரிக்கும்படி விட்டுவைத்தாய்நீ'' என்று ப்ராப்தாப்ராப்தவிவேகம்பண்ணிச்சொன்னால், அதுக்குஉனக்குச் சொல்லலாம்மறுமாற்றங்களுள. (மாற்றமுள) அதுக்கு அர்த்தமில்லை. ஸம்பந்தத்திலே ஒருகண்ணழிவுண்டாகிலிறே ஒரு மறுமாற்றம்சொல்லிக் கடக்கவிருக்கலாவது. உன்னோடுண்டான குடல்துடக்கு-போட்கனல்ல; உன்கண்வட்டத்தே ஸம்ஸரிக்கிறஇத்தைஇல்லைசெய்யவொண்ணுது. இதுக்குநீஎன்னமறுமாற்றம் சொல்லுவது.

(உள) ''நீசேதநனைபின்புபேற்றுக்குடலாகநீயேஅநுவர்த்தித்துவரவேண்டாவோ'' என்று உனக்குச் சொல்லலாம்; ''நாம், * ஆள்பார்த்துழிதருவாளுய், எதிர்சூழல்புக்குத் திரியாநிற்க, நீ ரே யன்றோ இவ்வளவாக மிறுக்குப்பண்ணினீர்'' என்று சொல்லலாம்; ''ஆவேனென்று இசைந்தவின்று வரநிற்கைக்குறுப்பாகவன்றோ நாம்முதலிலேசக்தியையும்ப்ரவ்ருத்தியையும்தந்துவிட்டது'' என்று சொல்லலாம்; நீ ஒரு உத்தரம்தேடி சொல்லுங்காட்டில் நான் படுகிற க்லேசத்துக்குப் பரிஹாரமாயிற்றோ? நான் படுகிறக்லேசத்தைப்பரிஹரித்துக் கொடுநின்றன்றோ உத்தரம் சொல்லுவது. (ஆகிலும் சொல்லுவன்) நான் சொன்னவற்றுக்கெல்லாம்நீஉத்தரம் சொன்னுயேயாகிலும் அதுக்குமேலே உத்தரம் சொல்லுகிறேன்.

(மக்கள் தோற்றக்குழி தோற்றுவிப்பாய் கொலென்று) ''நீ,

அரு.—முதற்பாட்டு, (மாற்றமுளவித்யாதி) '' அரங்கநகரப்பா'' என்றபதத்தை உட்கொண்டு, அர்த்தமில்லை யென்னுமத்தை உபபாதிக்கிறுர் (ஸம்பந்தத்திலித்யாதி). (போட்கனல்ல) க்ருத்ரிமனல்ல. அப்படிக்கையாலே அரங்கத்தில் நித்யமாக நித்ரை செய்யுமதில்லையென்ன வொண்ணுதேயென்று கருத்து. '' தாமரைக்கண்ணு'' என்றத்தை உட்கொண்டருளுகிறுர் (உன்கண்ணித்யாதி).

மாற்றமுண்டு என்றுசொல்லாதே ''உள'' என்று பஹுவசநமாகச் சொன்னதுக்குத் தாத்பர்யமருளுகிறுர் (நீயித்யாதி). சொன்னதுக்கெல்லாம் ஒன்றுசொன்னல் அதுக்குமேல் சொல்லும்படி உத்தரங்கள் அநேகமுண்டென்கையாலே, எனக்கத்தனை சொல்லப்போகாதென்று தோற்ற பஹுவசநப்ரயோகம் பண்ணினபடியென்று கருத்து.

நீர் சொல்லுமதுதான்ஏதென்னும் ப்ரஶ்நத்திலே '' மக்களித்யாதி '' என்று விவக்ஷித்துத் தாத்பர்யமருளுகிறுர் (நீயித்யாதி). ''தோற்றுவிப்பாய்''

http://acharya.org

சொன்னவற்றுக்கு மறுமாற்றம்சொன்னாயாகிலும், பின்னையும்உன்னை வடிம்பிட்டுக்கேட்கவேணுமென்னும் நிர்பந்தமில்லாத மநுஷ்யர்களுடைய கர்ப்ப(ஸ்஥)ஸ்தாநத்திலே என்னுடையகர்மாநுகுணமாக ஸம்ஸரிப்பிக்கிறாயோ" என்று. "ஸம்ஸரிக்கைக்குக்கர்மம்பண்ணுவானிவனிறே. அதுக்கீடாக ப்ரவர்த்திப்பிக்குமதன்றோ வேண்டுவது. ஆனாலும் சரீரத்தோடேயிருக்கச் செய்தேயன்றோ உமக்கு ஜ்ஞாநம் பிறந்தது" என்ன; நெடுநாள் "தேவோஹம், மநுஷ்யோஹம்- தேவோஹம், மநுஷ்யோஹம்" என்று அகன்றுபோந்ததும் இச்சரீரத்தோடேயன்றோ? இன்னம் கீழ்கழிந்தகாலம் அநாதி; மேலுள்ளகாலம் அநந்தம்; ஆனபின்பு ஸம்ஸரித்தகாலம் போராதோ? இது தண்ணியதென்றும், அத்தைக்கழித்துத் தருவாய் நீயென்றும்அறிந்தபின்பும் இந்த நோவுபடவேணுமோ?

ஆனாலும் "இத்தைக்கழித்துத்தருவோம் நாம்' என்னுமறிவைப் பிறப்பித்தோமே" என்ன; (ஆற்றங்கரை வாழ்மரம்போலஞ்சுகின்றேன்) ஆகில் நீபிறப்பித்தஜ்ஞாநத்துக்குப்பலம்-இதுவோ? சைதந்யத்தால் கொள்ளும்கார்யம் பயஸ்த்தாநமென்கை. ஆறு பெருகித் தன்வேரையகழ்ந்து பொகடாநின்றால், போரநிற்றல், பரிஹரித்துக் கொள்ளுதல், கூப்பிடுதல் செய்யவறியாதிறே. பயத்தில்வந்தால் சேதநனைகையும், பரிஹாரத்தில் வந்தால் அசித்ஸமனைகையுமாயிற்று இவனுக்கு ஸ்வரூபம்; பயமேயிறே இவனுக்குள்ளது. (௧)"அஹம் பீதோஸ்மி"(௨) "நன்றுமஞ்சுவன்"(௩) "மாசுச:-மாசுச:" என்பான்வேறொருவனிறே. பரிஹரிக்கை-அஹம்என்கையிறே, "உன்னுடைய அஹம் புத்தியை நினைத்து அஞ்சினையாகில் என்னுடைய அஹம் புத்தியைஅநுஸந்தித்து ஆறியிருக்கப்பாராய்" என்றானிறே.

என்று கேவலம் அவனைஅநாதரித்துச் சொல்லியிருக்கிறது. (கர்மாநுகுணமாக) என்று கூட்டுவானென்னென்ன வருளுகிறார் (ஸம்ஸரிக்கைக்கித்யாதி).

மேலுக்கவதாரிகை (ஆனாலுமித்யாதி). "ஆற்றங்கரைவாழ்மரம்போல்" என்றத்ருஷ்டாந்தத்துக்கு பாவமருளுகிறார் (ஆறித்யாதி). அத்தைத்ருஷ்டாந்தமாக எவ்வாகாரத்திலே சொன்னதென்னவருளுகிறார் (பயத்திலேயித்யாதி). (உன்னுடைய அஹம் புத்தியை) என்றதுக்கு "நான் என்பேற்றுக்கு யத்நம் பண்ணுகை-எனக்குச்சேராதென்று நினைத்தஞ்சினையாகில்" என்றுகருத்து.

---

(௧) ௧-ஜிதந்தா-௮. (௨) தி-வாய்-௮-௧-௧. (௩) ஸ்ரீ-௧௮-௬௬.

http://acharya.org

(நாற்றச்சுவையித்யாதி) பயத்துக்குப் பரிஹாரமும், உத்பாதகனும் நீயாயிருந்தாய். அதுக்கு பயஸ்த்தாநம்-ஆறு; உமக்கு பயஸ்த்தாநமேதென்ன; அதுக்கு ஆறு ஒன்று; என்னை அஞ்சாறு அகப்பட்டு போகடுகிறது, உன் பக்கல்நின்றும் அகற்றுகைக்குப் பரிகரம் சப்தாதிகள். அத்தைப்பரிஹரிக்கும் நீபூர்ணனாயிருந்தாய். (௧) [దైవీ హ్యేషా గుణమయీ మమ మాయా దురత్యయా । మామేవ యే ప్రపద్యన్తే - மமமாயாதுரத்யயா। மாமேவயேப்ரபத்யந்தே] நான் பிணைத்த பிணை ஒருவராலும் அவிழ்க்கப்போகாது, என்னையே கால்கட்டி அவிட்குமன்று கழிக்கலாமென்றாயிறே பிள்ளை திருநறையூரரையர் வார்த்தையைநினைப்பது.

மூ —சிற்றமுள வாகிலும்செப்புவன் மக்கள்
தோற்றக்குழிதோற்று விப்பாய்கொ லென்றஞ்சி
காற்றத்திடைப்பட்ட கலவர்மனம்போல்
ஆற்றத்துளங்கா நிற்பனாழிவலவா. (உ)

பதம்	உரை.	பதம்	உரை.
ஆழி	திருவாழியாழ்வானை	அஞ்சி	பயப்பட்டு
வலவா	வலக்கையிலேந்தின ஸர்வேஶ்வரனே!	காற்றத்திடைப்பட்ட	பெருங்காற்றிலே அகப்பட்ட
சிற்றம்உள	நீ சீறும்படியாக நான் செய்தவை பல உண்டு,	கலவர்	மரக்கலத்தினுள்ளே இருப்பவர் களுடைய
ஆகிலும் செப்புவன்—;		மனம்போல்	நெஞ்சைப்போலே
மக்கள்தோற்றக் குழிதோற்றுவிப்பாய் கொல் என்று—;		ஆற்ற	மிகவும்
		துளங்காநிற்பன்	நடுங்காநிற்பன். (உ)

(பயத்துக்குப் பரிஹாரமும்) என்றது-"நம்பி" என்றத்தைப்பற்ற. (அஞ்சாறு) சப்தாதிகளைந்து -எனக்கு ஆறுகளாயிற்றென்று ப்ரக்ருதார்த்தம். அஞ்சும் ஆறும் என்றுரஸோக்தி. விஷயங்களைந்தும், தத்க்ராஹகங்களாறும், கர்மேந்த்ரியங்களைந்தும், ஜ்ஞாநேந்த்ரியங்களாறும், ஊறு - ஸ்பர்ஶம். ரூபத்தைச் சொல்லாவிட்டது - பயத்தாலே கண்ணுஞ்சுழலையிட்டமை தோற்றுகைக்கென்று திருவுள்ளம். ... ... (௧)

அ௩.—இரண்டாம்பாட்டு. (சிற்றமித்யாதி) நாம்ஸஹஜஸௌஹார்தத்தை யுடையனாயிருக்க, தாமே அநாதிகாலம் "த்வம் மே - த்வம்மே" என்றால்,

(௧) கீ-௭-௧௪

வ்யா.—இரண்டாம்பாட்டு. (சிற்றமுள) திருவுள்ளத்துக்குச் சிறவேண்டுவன குவாலைச் செய்துவைத்து, அவையொன்றையும் பாராதே அநுகூலரைப்போலே திருமுன்பேநின்று சிலவார்த்தை சொல்லப்புக்கவாறே "கேட்டருளுகிறதேவர் ஸர்வஜ்ஞராகையாலே அப்போது அவற்றைச் செய்து இப்போது இவற்றைச் சொல்லா நின்றானிவன்; என் செய்தானுன்" என்று திருவுள்ளத்துக்குச் சிறவேண்டுவன குவாலுள.

(க) [ஏகோஹமஸ்மீதி சமந்யஸே - ஏகோஹமஸ்மீதிசமந்யஸே த்வம்] கெடுவாய்! ஜீவபரர்கள் இருவருண்டென்கிற ப்ரமாணப்ர ஸித்தியையும் கேட்டறியாயோ? நீ தான் ராஜாவாய் ப்ராமாணிகர் ஸேவிக்கவே தாயிருந்து போந்தது. [ஹ்ருச்சயம் - ஹ்ருச்சயம்] அப்போதொன்றைச் சொல்லி இப்போதொன்றைச் செய்கிற உன்னுடைய நினைவுக்கு வாய்த்தலையாயிருக்கிற அவனை யொன்றும் புத்திபண்ணிற்றிலையோ பாவி. [முநிம்-முநிம்] அவன்றான் உன்னைப் போலே ஜ்ஞாநஸங்கோசமுடையானொருவனென் றிருந்தாயோ?. [புராணம் - புராணம்] ஒருகால் ஜ்ஞாநஸங்கோச முண்டாய் ஒருகால்விஸ்தருத்முமவனென்றிருந்தாயோ? (உ) "பழகியான்தாளேபணிமின்" என்னக்கடவதிறே. பரிக்ரஹித்த சரீரம் தோறும்புகி பனுயிறே இவன் போருவது. முன்பு நின்றநிலை அறியான்; நடுநிற்கிற நிலையறியான்; மேல்போக்கடியுமறியான் இவன். முன்பு நின்ற

'அஹம்மே-அஹம்மே" என்றுவசப்படாதே, இப்போதும் "இன்னும்தோற்றுவிப்பாய்கொல்" என்று நிர்க்ருணரைச் சொல்லுமாபோலேகையும்திருவாழியுமாயிருக்குமாதிக்யத்தையும்பாராதேஎன்சொன்னீரென்னுமிடம்தோன்ற, சீறிச்சிவந்தகண்ணனாய் நிற்க, அதுக்குமேலே பாவ (பாவ) ஜ்ஞராய், அத்தையும் அநுமதித்துஅதுக்குமேலும் சொல்லத்தக்கத்தை அருளுகிறாரென்று ஸங்கதி.

கீழ்ப்பாட்டிலே " மாற்றமுளவாகிலும் சொல்லுவன் " என்றுபோரப் பொலிய உத்தரம் சொன்னவர்தாமே, "சிற்றமுள" என்று தன்பக்கலிலே குற்றமுண்டானதாக அங்கீகரிக்கிறதென்னென்ன; சகுந்தலையானவள் துஷ்யந்தனை இன்னதாகச் சொன்னப்போலே சொன்னரித்தனைபோக்கி, இழவானது தம் கர்மமென்கிறதறியாரோ வென்றுபரிஹாரம்திருவுள்ளம்பற்றி, சகுந்தலையெடுத்த ச்லோகத்துக்கு வ்யாக்க்யாநம் பண்ணுகிறார் (ஏகோஹமித்யாதி).

(க) பார-   (உ) ச-திருவ-உஉ.

http://acharya.org

நிலையுமறிந்து, இவனுக்குஸாத்மிக்குமதுவுமறிந்து, மேல்போக்கடியுமறிவான் அவனிறே. வாதப்ரக்ருதி, பித்தப்ரக்ருதி, என்றறிந்து ஓரோருடிக்காகப் பரிஹரித்துப்போரும் வைத்யர்களைப்போலே. முன்புதான் அசித்கல்பனாய்க்கிடக்கும்;பின்புதான் "கார்பீர்"என்னக்கதறுநிற்கும்இவன்.முன்புத்தைநிலையறிவானொருவன்பலாநுபவம் பண்ணுவிக்குமத்தனையிறே. [யோவேத்தா - யோவேதிதா] இத்யாதி முன்பு சொன்னவார்த்தையையும் இப்போதுசெய்கிற செயலையும் உள்ளபடியறிவான் யாவனொருவன், அவ் வீஶ்வரன்முன்பே யிருந்து அமணக்கூத்தடியாதே கொள்ளாய்.

திருவுள்ளத்துக்குப் பொறுக்கவொண்ணாதபடி பரஹிம்ஸைகளைப் பண்ணுவது; தேவரீர் இவைஙல்வழி போகவேணுமென்று ஹிதம்பார்த்து வைத்தால் அவ்வழிபோகாதொழிவது; சரீரபரிக்ரஹம் பண்ணி நிற்கையாலே அதுக்கடியான அவித்யாதிகளுக்கு வஶ்யனாவது; சப்தாதிகளிலே ஆபிமுக்க்யம் பண்ணி உன்பக்கலிலே வைமுக்க்யம் பண்ணுவது; உன்திறத்திலேபொறுக்கவொண்ணாதவற்றைச் செய்வது; உன்னடியார்விஷயத்தில் பொறுக்கவொண்ணாதவற்றைச் செய்வது; இரண்டிடத்திலும் நிர்நிபந்தநமாகச் செய்யுமவை; இவ்வழியாலே அநேகமிறே- தேவருக்குப் பொறுக்கவொண்ணாதவை. பகவதபசாரமாவது - ஈஶ்வரசேஷமான ஆத்மவஸ்துவை, என்னதென்றிருக்கை. அவனுடைய அநுக்ரஹஜந்மத்தை கர்மநிபந்தநஜந்மத்தோடு ஸமாநமாக புத்திபண்ணுகை. அவன் தன்க்ருபையாலே இவன் கோலிற்றொன்றைத் திருமேனியாகப்பரிக்ரஹித்தால், அத்தை இதரஸஜாதீயமாக ப்ரதிபத்திபண்ணுதல்செய்கை. பாகவதாபசாரமாகிறது- அர்த்தகாமநிபந்தநமாக பாகவதர்களோடேபொருமை கொண்டாடுகை. அஸஹ்யாபசாரமாகிறது - இவை இரண்டு விஷயத்திலும் ப்ரயோஜநநிரபேக்ஷமாகச்செய்கை. இப்படியால்தேவர்திருவுள்ளத்துக்குச் சிறவேண்டுவனகுவாளுள.

(ஆகிலும் செப்புவன்) சீறுகைக்கு வேண்டுமவையில்லாமை சொல்லுகிறேனல்லேன். ஆகில்பின்னை சொல்லுகிறதென்னென்னில்;

"உள"என்கிற பஹுவசநத்தாலே,சீற்றங்களும் பலவாக வேண்டுகையாலே அவை,அவற்றுக்குப் பண்ணப்பட்ட அபராத பாஹுள்யத்தாலே யாகையாலே அவற்றையெல்லாம் உபந்யஸிக்கிறார் (திருவுள்ளத்துக்கித்யாதி).

புறம்புபுகலில்லாமையாலே (க) "ꠂꠂꠂ - தமேவசரணம் கதꣳ" என்னுமாபோலே சொல்லுகிறேன். (மக்களித்யாதி) உனக்குச் சீறவேண்டும்படியான செயலுக்கடியான கர்மாநுகுணமாக நான் போக, நீ அதுக்கு அநுமதிதாநத்தைப்பண்ணி உதாஸீநரைப் போலே யிருக்கிறாயோ என்றஞ்சி. தன்னால்வந்த துக்கும் அவனால் வந்த துக்கும் அவனே இன்றாதாகலாம்படியிறே ப்ராப்தியிருப்பது. ப்ரஜைகிணற்றிலேவிழாநின்றால், வாங்காததாயைத்தானே தள்ளினா ளென்னக்கடவதிறே. இது உன்னை அகன்றுநோவுபடவேண்டுகிறது- நீ கைவிடுகையன்றோ என்னலாயிருக்குமிறே. "ஸம்ஸாரிகளான மநுஷ்யர்கள்கர்மாநுகுணமாக ஸம்ஸரிக்கும்கர்ப்ப ஸ்தாநத்திலே ப்ரவேசிப்பிக்கிறாயோ" என்றஞ்சி.

(காற்றத்தித்யாதி) பெருங்காற்றிலே அகப்பட்ட மரக்கலத்து க்குள்ளே அகப்பட்ட சேதநருடைய நெஞ்சுபோலே. பயப்படுகை க்கு மேற்பட பரிஹாரத்தில் அந்வயமில்லையிறே. அதுக்குட்பட்டமநு ஷ்யரெல்லாருக்கு முள்ளபயம் இவரொருவருக்கு முண்டாயிருக் கிறது. மிகவும் நடுங்காநிற்பன், சரீர வியோகமாத்ரத்திலே இவர்களுக்கு. ஆனால்பின்னை நம்மைச்செய்யச்சொல்லுகிறதேதுக் கென்ன; (ஆழிவலவா) உன்கையில் திருவாழிக்கும் எனதுஉள் நடுக் கத்துக்கும் சேர்த்திச்சொல்லிப்போ. உனக்கு அசக்தியுண்டென்று சொன்னாயாதல், என் நடுக்கத்தைப் பரிஹரித்தல்செய். (௨)

மூ;—தூங்கார் பிறவிக்க ளின்னம் புகப்பெய்து
வாங்காயென்று சிந்தித்து நானதற்கஞ்சிப்
பாம்போ டொருகூரையிலே பயின்றாப்போல்
தாங்காதுள்ளம் தள்ளு மென்தாமரைக்கண்ணா. (௩)

குற்றம்தம்மேலே யிருக்கச்செய்தே, எதிர்த்தலையை வெறுத்துக்கொண் டு காலிலே விழுகைக்கு மூலமென்னென்ன (தன்னாலித்யாதி). வாக்யார்த் தம் (ஸம்ஸாரிகளானவித்யாதி).

(பின்னை)என்றவநந்தரம் "ஆத்மநாசத்துக்கஞ்சு மிவருக்குச் சொல்ல வேண்டாவிறே" என்றுகூட்டுவது. ... ... (௨)

(க) ரா-ஸு-௩ ௩-அ-௩௩.

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
என்	எனக்கு ஸ்வாமியான	அதற்கு	அந்தஸம்ஸாரத்துக்கு
தாமரைக் கண்ணா	தாமரைபோன்ற திருக்கண்களையுடைய ஸர்வேஶ்வரனே!	அஞ்சி	பயப்பட்டு
இன்னம்	இனிமேலும்	பாம்போடு	ஸர்ப்பத்தோடே
தூங்குஆர்	தமஃப்ரசுரமான	ஒருகூரையிலே	ஒருகூரைவீட்டிலே
பிறவிக்கள்	ஜந்மங்களிலே	பயின்றாற்போல்	வஸித்தாற்போலே
புகப்பெய்து	புகச்செய்து	உள்ளம்	என்மநஸ்ஸானது
வாங்காய் என்று	மீட்கமாட்டாயென்று	தாங்காது	தரித்துநிற்கமாட்டாமல்
நான்சிந்தித்து	நான் நினைத்து	தள்ளும்	தடுமாறுநின்றது.

(௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (தூங்கார் பிறவிக்கள்) அசைவு மிக்க ஜந்மமென்னுதல். தமஃப்ரசுரமான ஜந்மமென்னுதல். (இன்னம் புகப்பெய்து) இதுக்குமுன்பு பட்டது போராதோ? (வாங்காயென்று) மீட்கைக்குத்தாமும்கூட்டென்னுமிடத்துக்குப் பாசுரமிட்டுச்சொல்லுகிறிலர். (சிந்தித்து நானதற்கஞ்சி) பரிஹாரத்தில் வந்தால் தம்மை அசித்ஸமராக நினைத்தாரேயாகிலும், சேதநரானவாசிக்கு பயம்அநுவர்த்திக்கையும் தவிராதே.

(பாம்போடு) அவையொழியில் நாட்டார் பிழையாதபடியிருக்கிறவை, இவர்க்கிருக்கிற படியாயிற்று இது. வெய்யிலிலே நொந்தவன் ஆடுகிற ஸர்ப்பத்தின் நிழலிலே போய் ஒதுங்கி, அது அள்ளிக்கொள்ளு மென்றறியாதே ஸுகிக்கப்பார்க்குமா போலேயிருப்பதொன்றிறே. அது அள்ளிக்கொண்டது அப்போதேயிறே.

அரு.—மூன்றாம்பாட்டு. (தூங்காரித்யாதி) கீழ்ப்பாட்டிலே "இவ்வாழ்வார்தம்மிடத்திலே குற்றங்களைச் சொல்லிக்கொண்டு நம்மையும் இன்னாதானார்; இதுக்கடி ஸம்பந்தத்திலுறைப்பிறே" என்று செவ்வரியோடிக் கண்டகண்ணனாயிருந்து, "ஆழ்வீர்! நீர் உம்மிடத்தில் குற்றங்களையுண்டென்றும் சொல்லி, நம்மை இன்னாதாகிறதென்? நாம்செய்தபடி செய்கிறோமென்றாறியிரும்" என்றுசொல்ல; என்னுள்ளம்நின்றவாநில்லாதே; என்செய்கேனென்றாரென்று ஸங்கதி.

தூங்குதல் - அசைவும், உறங்குதலுமாக வருளுகிறார் (அசைவித்யாதி). (அவை)-விஷயங்கள். (அப்போதேயிறே) என்றது-மயர்வறமதிநலமருளு

http://acharya.org

(ஒரு கூரையிலே) கண்ட தடைய அதிசாங்காஹேதுவாயிற்று. (தாங்காதுள்ளம் தள்ளும்) தரியாதே ஹ்ருதயமானது தடுமாறு கின்றது. அதுக்கு நான் செய்யவேண்டுவதென்னென்ன; (என் தாமரைக்கண்ணா) (க) "ஆஜகாம-ஆஜகாம" என்று லங்கையில்பொருந்தாதேபோந்தவன்தானே, பெருமாளதானவாறே, (உ) "விபீஷணோ விதேயம்மே - விபீஷணவிதேயம்ஹி" என்னலாம்படி அங்கே பொருந்தினனிறே. அப்படி நீயே உன் திருக்கண்களாலே குளிர நோக்கப்பெறில், நான் இது தன்னிலேயும் இருக்கவல்லேன். ஸ்வஸம்பந்தத்தாலே பார்த்தவன்றுறேஇவ்விடம் த்யாஜ்யமாவது. அவன் ஸம்பந்தத்தையிட்டுப் பார்த்தபோது, இதுதானும் உத்தேஸ்யமாயிருக்குமிறே.

"'இதில் அரைக்ஷணம் பொருந்ாதபடியாயிருக்கிறஇவர்பாசுரத்துக்கும், இதொழியச் செல்லாதபடியாயிருக்கிற நம்பாசுரத்துக்கும் வாசியறியாதாரொருவன் ஶரண்யனைப்பெறில், நமக்கு அப்பேறு பெறலாவது' என்றருளிச் செய்யாததாமே, அநந்தரம் (௩) 'மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் - மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்' என்கிறபடியே 'இத்தலையிலுள்ளது போட்கனுனாலும் நான் அவனைவிடேன்'' என்றருளிச்செய்தபடியாலே, நமக்குப்பெறுகைக்குத் தட்டில்லை'' என்றருளிச்செய்தருளினார் நஞ்சீயர். இது-மெய்யாதல், இல்லையாகில் பரிஹாரமின்றிக்கேபோதல் செய்யுமத்தனை. இதுபொய்யாகிலும் நமக்கு அஞ்சவேண்டாம்; இத்தால் பொய்யாகாதென்றபடி. இது பொய்யாகில்நரகாத்ய நுபவங்களைச்சொல்லுகிறவையோமெய்யாகப் புகுகிறது. .... (௩)

வதற்கு முன்பிறே என்கை. "உள்ளம்தள்ளுமென் தாமரைக்கண்ணா" என்கையாலே-உள்ளம் தள்ளாதபடி கடாக்ஷிக்கவேணுமென்று விவக்ஷித்து, இங்கிருக்க இவன்கடாக்ஷத்தாலே நெஞ்சுபொருமோவென்ன; த்ருஷ்டாந்தாந்தரம். தாத்பர்யமருளுகிறார்(ஆஜகாமேத்யாதி).

"பாம்போடொருகூரையிலே பயின்றாப்போலேஉள்ளம் தள்ளும்"என்று ஸஹ்ருதயமாக ஆழ்வார் அநுஸந்திக்க, இப்பாசுரத்தை அந்தபாவவ்ருத்தியில்லாதாரும்அநுஸந்தித்தால்அப்பேறுண்டோ"என்றும், வினையாயினசாரகில்லாயே''என்கிறாரிறே; இதுகூடுமோவென்றும்சங்கைகயைஸம்வாதமுகேநபரிஹரிக்கிறார் (இதிலித்யாதி). ... ... (௩

(க) ரா-யு-கஎ-க. (உ) ரா (௩) ரா-யு-கஅ-௩.

மூ;—உருவார்பிறவிக்க ளின்னம் புகப்பெய்து
திரிவாயென்று சிந்தித்தி யென்றதற்கஞ்சி
இருபாடெரி கொள்ளியினுள் ளெறும்பேபோல்
உருகாநிற்கு மென்னுள்ள மூழிமுதல்வா. (ச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஊழிமுதல்வா	ப்ரளயகாலத்திலும் ரக்ஷகனாய்நின்றவனே!	அதற்குஅஞ்சி—;	
உருஆர்	நாநாரூபமான	இருபாடு	இரண்டுபக்கத்திலும்
பிறவிக்கள்	ஜந்மங்களிலே	எரி	நெருப்புப்பற்றி யெரியாநிற்கிற
இன்னம்	இனிமேலும்	கொள்ளியின்	கொள்ளிக்கட்டையின்
புகப்பெய்து	ப்ரவேசிப்பித்து	உள்	உள்ளே அகப்பட்ட
திரிவாய் என்று	"நீ இப்படியே சுற்றிச் சுழலக்கடவை" என்று	எறும்பேபோல்	எறும்புபோலே
சிந்தித்தி என்று	(என்விஷயத்திலே) நினைத்திருக்கிறாய் என்று	என்உள்ளம்	என்மநஸ்ஸானது
		உருகாநிற்கும்	உருகிக்கரையாநின்றது. (ச)

வ்யா.—நாலாம்பாட்டு. (உருவார்பிறவிக்கள்) (க) "நாஸதோ வித்யதே-நாஸதோ வித்யதே" இத்யாதி. அநேகரூபமாய் ஒருபடிப்பட்டிரா

அந.—நாலாம்பாட்டு. (உருவாரித்யாதி) "தாமரைக்கண்ணா" என்று நீர் இப்போது கடாக்ஷிக்கச் சொல்லுகிறதென்? அடியிலே நம்கடாக்ஷம் பெற்றுவிறே 'நீர்' பாம்போடொரு கூரையிலே பயின்றாற்போலே தாங்காதுள்ளம்' என்றஞ்சுகிறீர்; இப்படி அஞ்சினரைக்கிட்டவஞ்சுங்காணும் விஷயங்களும்" என்ன; "நீ, அஞ்சினவென்னை அச்சத்துக்குடலானநிலத்திலேதானே வைத்திருக்கையாலே, ஊழி முதல்வனை நீ ஸ்வதந்த்ரனென்று நினைத்தாயோ" என்று உருகுமென் நெஞ்சென்றருளுகிறாரென்று ஸங்கதி.

"இந்தச்சரீரம்-ஸ்திரமல்லாமையாலே, சரீராந்தரம் வந்தால்இப்போது அஞ்சினவர்க்கு ப்ரச்யுதிவருமே; அப்போது பழையபடியேயாய் விடுமே" என்றுஉருகுமென்றுகருத்து. "பிறவிக்கள்" என்னவமைந்திருக்க, "உருவார்" என்று விசேஷிப்பானென்னென்ன வருளுகிறார் (நாஸத: என்று தொடங்கி, போருமிறே என்னுமளவும்). "உரு" என்று சரீரமாய், ஆர்தல்-மிகுதியாய் சரீரமேமிக்கு ஆத்மாவை சிறுக்கும்படியான ஜந்மமாகையாலே தேஹாத்மாபி

(க) கீ-உ-

http://acharya.org

மையாலே, அஸத்தானவிது விநாஶயோகியாயிருக்கும். ஏகரூபமாயிருக்கையாலே, ஆத்மவஸ்துவானது அவிநாஶியாயிருக்கும். இப்படி இரண்டுக்கும் தத்வதர்ஶிகளாயிருக்குமவர்களாலே நிர்ணயம் காணப்பட்டது. "உபயோரபி த்ருஷ்டோऽந்தஸ்த்வநயோஸ்தத்வதர்ஶிபி: - நிரூபணஸ்யநிர்ணயாந்தத்வாத்நிர்ணயாந்தோத்ருஷ்டஃ". ஆத்மவஸ்துவானது- அஹம்புத்திபோத்யமாய், ப்ரத்யக்வஸ்துவாயிருப்பதொன்றாய், தேஹமாகிறது-க(கு)டாதிகளைப்போலே இதம்புத்திபோத்யமாய், பராகர்த்தமாய், அநாத்மாவாய், ஆத்மாவோடு அதிதூரமாயிருக்க,இத்தேஹத்தில் அஹம்புத்திபண்ணலாம்படிபொருந்திப்போந்த ஜந்மங்களிலே, தேஹத்திலே அஹம்புத்திபண்ணிப்போருகையாலே, அதுவே விஸ்த்ருதமாய் ஆத்மவஸ்துதேய்ந்துபோருமிறே. தேஹாத்மாபிமாந ஜநகமாயிருக்கிற ஜந்மங்களிலே இன்னமும் என்னுடைய கர்மாநுகுணமாக ப்ரவேசிப்பித்து.

(திரிவாயென்று) "திறந்துகிடந்த வாசல்தோறும் நுழைந்துதிரியும் பதார்த்தம்போலே, தேவாதி சரீரங்கள் தோறும் புக்கு, 'தேவோऽஹம், மநுஷ்யோऽஹம்-தேவோஹம்,மநுஷ்யோஹம்' என்று இங்ஙனே க்லேசப்பட்டுத் திரிவானென்று நீ நினைத்திருக்கிறாயோ?" என்று அஞ்சாநின்றேன். (சிந்தித்தியென்றதற்கஞ்சி) உனக்குசிந்தாமாத்ரம்; என்னுடைய க்லேசத்துக்கு அவதியில்லை. நானேகர்மங்களைப்பண்ணிவைப்பனே? பின்பு அவைதானேகொண்டுநடத்துமே. அநுமதிதாநத்தைப் பண்ணியிருக்குமத்தனையிறே உனக்குவேண்டுவது. (இருபாடெரிகொள்ளியினுள்ளெறும்பேபோல்) இரண்டு தலையும் நெருப்புப்பற்றி எரியாநிற்க, நடுவே அகப்பட்டு நோவுபடுகிற க்ஷுத்ரபதார்த்தம்போலேயாயிற்று, ஜந்மமரணங்களிரண்டுக்கும் நடுவே அகப்பட்டு நோவுபடுகிறபடி. அவ்வருகு போக்கின்

மாநஜநகமென்று பலிக்கையாலே, இந்ததேஹாத்மாபிமாநம் ப்ரமமென்கைக்கு ப்ரமாணோபந்யாஸ பூர்வகமாக வரக்காட்டி உபபாதித்தாராயிற்று. வாக்யார்த்தமருளுகிறார் (தேஹாத்மேத்யாதி).

"உருகாநிற்கும்" என்றத்தைக்கடாக்ஷித்து, "சிந்தித்தி" என்றதுக்குக்கருத்தருளுகிறார்(உனக்கித்யாதி). "திரிவாய்" என்றத்தைக்கடாக்ஷித்து "உரு" என்றதுக்கு பாவமருளுகிறார் (நாநீத்யாதி). (க்ஷுத்ரபதார்த்தம்)என்றது

http://acharya.org

றிக்கே இவ்வருக்கு பொறுக்கமாட்டாதே படுகிறபாடு, கொள்ளியினு ள்ளெறும் பென்னவுமாம். (உருகாநிற்குமென்னுள்ளம்) க்லேசத்து க்கு ஓரவஸாதமுண்டாகிலிறே ஓரளவிலேஉருகிவலிப்பது. அதுக்கு நாம் பின்னைச்செய்வதென்னென்ன; (ஊழிமுதல்வா) ப்ரளயத்திலே அகப்பட்டு அழிந்துபோகப்புக்கதையெடுத்து ரக்ஷித்தவனன்றோ நீ.

மூ.—கொள்ளக்குறையாத விடும்பைக்குழியில்
தள்ளிப்புகப்பெய்தி கொலென்றதற்கஞ்சி
வெள்ளத்திடைப்பட்ட நரியினம்போலே
உள்ளம்துளங்காநிற்ப னூழிமுதல்வா. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	ஊழிமுதல்வா!		என்று அதற்குஅஞ்சி;—
கொள்ள	அநுபவித்தாலும்	வெள்ளத்திடைப்பட்ட	மஹாப்ரவாஹத்திலகப்பட்ட
குறையாத	நசியாத	நரிஇனம்போலே	நரிக்கூட்டம்போலே
இடும்பைக்குழியில்	கர்ப்பஸ்தாநத்திலே	உள்ளம்	என்னுடையஹ்ருதயம்
தள்ளி	தள்ளி	துளங்காநிற்பன்	தடுமாறும்படி இராநின்றேன். (ரு)
புகப்பெய்திகொல்	(மேன்மேலும்) ப்ரவேசிப்பிக்கப்போகிறாய்;		

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (கொள்ளக்குறையாத) க்லேசப்படவுமாயிற்றிறே; அநுபவவிநாஶ்யமாகப்பெற்றதாகில்காலமெல்லாம் அநுபவியாநின்றாலும்முதலில் குறையாதபடி யிருக்கிறக்லேசத்தைவிளை

"பண்ணெறும்பு"என்றபாடத்தைத் திருவுள்ளம்பற்றி.பாடாந்தரத்தைக்காட்டுகிறார் (கொள்ளியினுள்ளித்யாதி). (அதுக்கு) நீர் இப்படி அதி சங்கை பண்ணுமதுக்கு. ... ... (ச)

அரு;—அஞ்சாம்பாட்டு. (கொள்ளவித்யாதி) "நீ குளிரநோக்கப் பெறில், நான் இதுதரிலும் இருக்கவல்லேனென்று சொன்னீர்; நல்லதென்றிருந்தால் அதிசங்கைபண்ணி, ப்ரளயத்தில் நின்றும் எடுத்தாப்போலே எடுக்கவேணுமென்கிறீர்; இப்படி நீரிரண்டுபடியும் சொன்னால் நான்செய்வதென்" என்று கேட்க, மீளவும் தன்னை ஸம்ஸாரப்ரளயம்கொள்ளாதபடியே பண்ணவேணுமென்று நிர்ணயம் தோற்றச்சொல்லுகிறாரென்று ஸங்கதி.

"இடும்பை" என்றதினர்த்தம்-(க்லேசத்தை) என்றது. "குழியில்புகப் பெய்திகொல்" என்னவே அமைந்திருக்க "தள்ளி" என்றுவிசேஷித்தத்தாலே

http://acharya.org

ப்பதான கர்ப்பஸ்த்தாநத்திலே. (தள்ளி) எல்லாவற்றுக்கும் அவனை இன்னுதாகலாம்படியிறே ஸம்பந்தமிருப்பது. தான் இடறி, தாய் முதுகில்குத்தும் ப்ரஜையைப்போலே; அத்தலையாலே வந்ததுக்கு அவனை இன்னுதாமோபாதி, இத்தலையாலே வந்ததுக்கும் அவனை இன்னுதாகலாம்படியிறே ப்ராப்தி இருப்பது. கிணற்றிலேவிழுகிற ப்ரஜையைவாங்காததாயைத்தானே தள்ளினுள்'' என்னக்கடவதிறே. அடியிலே நீ பரிஹரியாமையன்றோ இது அகலவேண்டிற்று.

உதங்கன் ''துர்யோதநாதிகள் பட்டுக்கிடக்கிறபடியைக்கண்டு, பிள்ளை பக்கலிலேவந்து, சீற்றத்தாலே சிவந்தகண்களும்தானுமாய்'' ''ஸர்வஸாதாரணனுயிருக்கிறநீ ஒருதலையிலே பக்ஷபதித்துஇவர்களை அழியச்செய்தாயே'' என்ன; ''நானும் இரண்டுதலையும்பொருந்தவிடலாயோவென்று ஆவதெல்லாம் பார்த்தேன்; அவர்கள் ஒருகோல் குற்றுநிலமும்கொடோம்,என்றபின்புகாண்நான்அழியச்செய்தது'' என்ன; ''அவர்கள் இசையும்படியாகவும் நீயேபண்ணுவிட்டதென்?'' என்றுனிறே. (புகப்பெய்தி கொலென்றதற்கஞ்சி) நெருப்பிலே அகப்பட்டு எரிகிறவனை, திரிய அதுக்குள்ளே தள்ளி ஒன்றையிட்டு அமுக்குவாரைப்போலே, (வெள்ள) வெள்ளத்துக்குள்ளே அகப்பட்டு நோவுபடுகிற கோமாயுகணம்போலே. அவையெல்லாவற்றுக்கு முள்ள பயமுண்டாயிற்று இவரொருவர்க்குமே. (ஊழி முதல்வா) நீ பரிஹரித்த ப்ரளயாபத்தினளவல்ல நான்நோவுபடுகிற ஸம்ஸார ப்ரளயம்; அங்கொருவர் அபேக்ஷியாதிருக்கப்பரிஹரித்தாய்; இங்கு நான் அபேக்ஷிக்கவேண்டுகிறஹேதுவென்? (ரு)

மூ.—படைநின்ற பைந்தாமரையோ டணி நீலம்
மடைநின்றலரும் வயலாலிமணாளா
இடையனெறிந்த மரமேயொக்கிராமே
அடையவருளா யெனக் குன்றனருளே. (சு)

கிர்தயர்செய்யும் செயலாய்த்தோற்றுமே? இப்படி அருளிச்செய்யப்போமோ? எடுக்கவினைத்தவனை ''தள்ளினுய்'' என்றால், எடாமைக்கு உறுப்பாய்விடாதோ வென்னவருளுகிறர் (எல்லாவற்றுக்குமித்யாதி-வேண்டிற்றென்னுமளவும்).

இன்னுதாகைக்கு லௌகிக த்ருஷ்டாந்தம்காட்டி, இதிஹாஸஸித்தமான தொருத்ருஷ்டாந்தம் காட்டுகிறர் (உதங்கனித்யாதி). (பிள்ளை) வெண்ணெய்க்காடும் பிள்ளை. ... ... (ரு)

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
படை	கலப்பைக்கும்அருகே கிடக்கும் நிலத்திலே	மணாளா	நிர்வாஹகனான ஸர்வேஶ்வரனே!
நின்ற	தப்பி நின்ற	இடையன்	இடையனானவன் (ஆடுமாடுமுதலியவற்றுக்காக)
பைந்தாமரை யோடு	தாமரை மலரோடே	எறிந்த	கத்தியையிட்டு வெட்டிச் சாய்த்த
அணி	தர்ஶநீயமான	மரமே ஒத்து	மரமானது ஓரிடம்
நீலம்	நீலோத்பலங்களானவை (பறித்துப் பொகடப்பட்டு)	இராமே	பச்சையாய் ஓரிடம் உலர்ந்துகிடக்குமாபோலேயிராமல்
மடை	நீர்பாயும் மடைகளிலே	அடைய	நான் உன்னை அடையும்படி
நின்று அலரும்	நின்றலரும்படியான		
வயல்	வயல்களையுடைய	எனக்கு உன்றன் அருளை அருளாய்.	
ஆலி	திருவாலிக்கு		(௯)

வ்யா;—ஆறும்பாட்டு;(படைநின்ற) இப்பாட்டியலருளிச்செய்யும் போது இதுவே அமையுமென்னும்படி அருளிச்செய்தருள்வர்;

இரண்டருகும் உழுது போகாநிற்க, நடுவுகலப்பைக்கு அருகே கிடக்குமிடத்தை "படை" என்னக்கடவதிறே. படையிலே தப்பிநின்ற தாமரையும் நீலமும் களையாகப் பறித்துஎறட்டால், புகட்டமடையிலே கிடந்தலருமாயிற்று வயல். படையிலே தப்பிநின்ற விகஸிதமானதாமரையோடே தர்ஶநீயமானநீலமானது பறித்துப்பொகட்டு மடையிலே நின்றலரும்படியான வயலையுடைத்தான திருவாலியிலே ஸந்நிஹிதனானவனே?

